229

# ஆருஹத தர்ம விளக்கம்

## (ஜைன தர்மம்)

229
2-54

28 APR 1954

இயற்றியவர் :

வியாக்கியான வாசஸ்பதி கவிகுல கிரீட பூஜ்ய
பாத ஆசார்ய தேவ ஸ்ரீமத் விஜயலப்தி
சூரிஸ்வர்ஜி மகாராஜ் அவர்களின்
பட்டப் ப்ராபவக் தக்ஷிண
தீபக்பூஜ்ய ஆசார்ய தேவ ஸ்ரீமத்
விஜய லக்ஷ்மண சூரிஸ்வர்ஜி மகாராஜ்
அவர்களின் சிஷ்யரத்ன கவிகுல திலக பூஜ்ய

**முனிராஜ் ஸ்ரீ கீர்த்திவிஜயஜீ மகாராஜ்**

★

Q3
N54
112062

பூ. பா. வ்யா. லா. ஆசார்ய தேவ்

**ஸ்ரீமத் விஜய்லப்தி சூரீஸ்வர்ஜி மஹாராஜ்**

அவர்களின் சிஷ்யர் பட்டாலங்கார்



OFFICE OF THE REGISTRAR OF ...
2 APR 1954

பூஜ்ய ஆசார்ய தேவ்

**ஸ்ரீமத் விஜய்லக்ஷ்மண் சூரீஸ்வர்ஜி மஹாராஜ்**

பூ. பா. ஆசார்யதேவ்

**ஸ்ரீமத் விஜய் லக்ஷ்மண் சூரீஸ்வர்ஜி மஹாராஜ்**

அவர்களின் சிஷ்ய ரத்னம்



பூஜ்யமுனிராஜ்

**ஸ்ரீகீர்த்தி விஜய்ஜி மஹாராஜ்**

நமோ ஜிணாணம்

ஆத்ம கமல லப்தி சூரிஸ்வர்ஜீ ஜைன
கிரந்த மாலாவின் பதினெட்டாவது புஷ்பம்.

# ஆருஹத தர்ம விளக்கம்

## (ஜைன தர்மம்)


இயற்றியவர் :

வியாக்கியான வாசஸ்பதி கவிகுல கிரீட பூஜ்ய பாத ஆசார்ய தேவ ஸ்ரீமத் விஜயலப்தி சூரிஸ்வர்ஜி மகாராஜ் அவர்களின் பட்டப்ப்ராபவக் தக்ஷிண தீபக் பூஜ்ய ஆசார்ய தேவ ஸ்ரீமத் விஜய லக்ஷ்மண சூரிஸ் வர்ஜி மகாராஜ் அவர்களின் சிஷ்யரத்ன கவிகுல திலக பூஜ்ய

**முனிராஜ் ஸ்ரீ கீர்த்திவிஜயஜீ மகாராஜ்.**



நன்கொடையாளர் :

S. O. பவர்லால்ஜி ஸேடியா
(அவர்கள் சகோதர்கள் காலஞ் சென்ற 1. சுந்தர்லால்,
2. முல்சந் ஸேடியா இவர்களின் ஞாபகார்தமாக.)

*1750 பிரதிகள்*

*5000 பிரதிகள்.     முதல் பதிப்பு.     வி. சம் 2010*

*5000 பிரதிகள்   குஜராத்தி*
*5000 பிரதிகள்   இந்தி*
*5000 பிரதிகள்   தமிழ்*
*5000 பிரதிகள்   ஆங்கிலம்*

வெளியிடுவோர் :

ஸ்ரீ ஆத்ம கமல லப்தி சூரிஸ்வர்ஜி

ஜைன ஞான மந்திர்,

6, எஸ்லேன்.

தாதர், பம்பாய். B. B. N. 28.

---

*ராஜன் எலக்டிரிக் பிரஸ், சென்னை-1.*

# முன்னுரை

[ஸ்ரீ ரிஷபதாஸ்ஜி ஜெயின் அவர்கள் ஜைன சாசனத்திற்கு உண்மையான தொண்டு செய்பவர். அவருக்கு இலக்கியத்திடத்திருக்கும் பற்றுதல் மிகவும் பாராட்டத் தக்கது. இலக்கியத்தை பரவச் செய்வதற்காக அவர் மிகவும் உழைப்பு எடுத்துக் கொள்கிறார். அநேக தர்ம ஸ்தாபனங்களில் அவர் அங்கத்தினராய் இருப்பதனால் ஜைனர்கள், ஜைனரல்லாதவர்களின் சமாஜத்தில் பாராட்டப்படுகின்றார்.

அவர் இவ்வருஷம் மதராஸ் ஆந்திர ஜில்லா காங்கிரஸ் கமிட்டியின் பொது காரியதரிசியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவர் இந்த முன்னுரையை மிகவும் சந்தோஷத்தோடு எழுதி இந்தப் புஸ்தகத்தின் அழகை அதிகப்படுத்தியுள்ளார்.

—பதிப்பாளர்.]

நாம் இயற்கையில் பார்க்கின்ற விஷயம் இது. வியாதியால் பீடிக்கப்பட்ட ஒருமனிதன் அதிகக் கவலையும் துன்பத்தையும் உடையவனாய் தன்னுடைய நோய் தீருவதற்காகப் பெருமுயற்சி செய்கின்றான். ஆனால், அவனுடைய நோயைப் போக்கக்கூடிய சாதனங்களும் வஸ்துக்களும் கிடைக்காதவரையில் அவனுடைய முயற்சி பயனடைவதில்லை. அம்மாதிரியாகவே புலால், ரத்தம், மலம், மூத்திரம் ஆகிய அசுத்த வஸ்துக்களால் நிறைந்திருக்கும் நாற்றமுடைய சரீரத்தினின்றும் பிறப்பு, மூப்பு, சாக்காடு ஆகிய மகாரோகங்களினின்றும் தப்பிப் போவதற்காக அறிவுள்ள மனிதன் முயற்சி செய்வது இயற்கையாகும். அவனுடைய நோக்கம்

வெற்றி பெறுவதற்காக அவன் பலவிதமான ஆராய்ச்சிகளையும், உபாயங்களையும் தேடுவது இன்றியமையாததாய் இருக்கின்றது. மனிதன் செய்யும் இந்த ஆராய்ச்சிக்குத் தத்துவ ஆராய்ச்சி என்று பெயர். பாரதவாசிகளாகிய நம்மிடத்தில் ஆத்ம சிரத்தை அதிகரித்து முக்தி அடைவதற்காகப் பலவிதமான உபாயங்கள் பிரசாரம் செய்யப்பட்டு வருவதால் முக்திவாதமே நம்முடைய தேசத்தில் ஒரு மகா மந்திரமாகிவிட்டது. "ஸா வித்யா யா விமுக்தயே" என்னும் பிரம்ம வாக்கியம் பாரத தேசத்தில் நாலாபக்கங்களிலும் பரவி இருக்கின்றது. ஆனால் சிறப்புள்ளதும் ஒழுங்குள்ளதும் சுலபமானதும் ஆன முக்தி மார்க்கத்தைப் போதிப்பதில் ஆருஹததரிசனம் (ஜைன தரிசனம்) எல்லாவற்றிற்கும் மேலான நிலையை அடைந்திருக்கின்றது. ஏனென்றால் முக்தியை அடைவதற்கு வேண்டிய சாதனங்களையும் விதிகளையும் ஜைன சமயம் தெளிவாகவும் அழகாகவும் விளக்கிக் காட்டுவது போல வேறு எந்த மதமும் விளக்கவில்லை.

கொலை, பொய், களவு, காமம், மிகுபொருள் வேட்டல் ஆகிய ஐந்தும் தவிர்க்கப்பட வேண்டும் என்று எல்லா மதங்களிலும் கூறப்பட்டிருந்தபோதிலும் அவற்றை வாழ்க்கையில் அனுஷ்டிக்கும் முறை ஜைனதரிசனத்தில் மிகவும் பிரசித்தமானது. ஆத்மா படிப்படியாக உயர்ந்த நிலைக்கு ஏறக்கூடிய முறைமையும் (குணஸ்தானம்), ஜீவன்களைப் பற்பல விதங்களாக அறியும் முறைமையும் (மார்க்கணஸ்தானம்) மிகவும் பாராட்டக் கூடியதாயும் அறியவேண்டியதாயும் இருக்கின்றன. இவைகளை அறிவதால் ஜைன சமயத்தின் விசேஷத்தன்மை அறியவரும்.

"யுக்திபாவம் பவேத்தத்வம் ந தத்வம் யுக்தி வர்ஜிதம்'' என்பது ஜைன தரிசனத்தின் கொள்கை. அதாவது ஒவ்வொரு விஷயத்தையும் யுக்தி பூர்வமாக அறியவேண்டும் என்பதாம். எந்தக் காரியமாயிருந்தாலும் அதற்குச் சாதகமானதும் பாதகமானதும், அனுகூலமானதும் பிரதிகூலமானதும், ஆக்குவதும் அழிப்பதும் ஆகிய பல விஷயங்களையும் ஆழ்ந்த யோசனையோடு விசாரணை செய்து அறியவேண்டும். இதற்கு முக்கியகாரணம் ஜைனதரிசனத்தினுடைய சியாத்வாத நியாயமாகும். அது முக்கியமான சித்தாந்தமாக கருதப்படுகின்றது. அதனுடைய உபயோகத்தாலும் வஸ்துக்களின் குணங்களை வேறு வேருக உணர்வதாலும் பூரணமான அறிவுகிடைக்கின்றது. இந்தக் காரணத்தினுல் இந்தச் சியாத்வாதத்தை அனேகாந்தவாத மென்றும் அபேக்ஷாவாத மென்றும் கூறுகின்றனர். மேல்நாட்டு வித்வான்களும்கூட இந்தச் சியாத்வாத சித்தாந்தத்தை மிகவும் போற்றுகின்றனர். இஃது உலகத்தில் பல்வேறு அபிப்பிராயங்கள் உடையவர்களை ஒன்று படுத்துவதற்கு ஒரு சிறந்த சக்தி வாய்ந்த தாயும் உலகத்தில் காணப்படும் பரஸ்பரம் விரோதங்களாகத் தோன்றும் விஷயங்களையும் குணங்களையும் ஒற்றுமைப் படுத்தக்கூடியதாயும் இருக்கின்றது.

உலகத்தில் மிகவும் சிறந்த விஞ்ஞானியென்று பாராட்டப்படும் டாக்டர் ஈன்ஸ்டின் என்பவருடைய சாபேக்ஷவாதம் (Theory of relativity) அநேக அம்சங்களில் சியாத்வாதத்தை ஒத்திருக்கின்றது. தத்துவங்களை உணர்வதற்குச் சியாத்வாதம் மிகவும் உத்தமமான சாதனமாய் இருப்பதால் எல்லாத் தரிசனங்க

ளுள்ளும் ஜைனதரிசனத்திற்கு முக்கியமான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தரிசனத்தில் கற்பனை களுக்கும் மூடக் கொள்கைகளுக்கும் கொஞ்சம் கூட இடம் இல்லை. எந்த விதானத்தின்படி இந்த விராட ரூபமான உலகமானது ஒழுங்காக நடைபெற்று வரு கின்றதோ அந்த விதானத்தின் மூல திரவியங்களால் இந்தத் தரிசனம் நிறையப்பட்டுள்ளது. இதைத் தர்க்க ஞானத்தோடு கூடிய விஞ்ஞானிகள் பிரமாண சித்த மும் ஹேதுவாதமும் நிறைந்த தரிசனம் என்று கூறு கின்றனர். என்ன என்ன ஆச்சர்யகரமான விஷயங்கள் தற்காலத்தில் விஞ்ஞானிகளால் ஆராய்ச்சி மூலம் அறியப்படுகின்றனவோ அவைகளெல்லாம் ஜைன சித்தாந்தத்தில் முன்னமேயே எழுதப் பெற்றுள்ளன. உதாரணமாக ஓசை, அது செல்லும் வேகம், அத னுடைய சக்தி, சககாரி தத்துவங்கள், ஒளி, இருட்டு, நிழல், உஷ்ணம், ஆகியவைகளின் பரமாணு, பதார்த் தங்களின் அந்தர பரிநமணம், வனஸ்பதியிடத்து அறியும் தன்மையுண்டு என்பது, நீர்த்துளியில் சூக்ஷ்ம ஜந்துக்கள் உண்டென்பது, பரமாணுக்கள், ஸ்கந்தங் கள் ஆகியவற்றின் விவரம் முதலியவை நூற்றுக்கணக் கான வருஷங்களுக்கு முன்பே எழுதப்பெற்ற ஜைன சாஸ்திரங்களில் காணப்படுகின்றன. இதுவரையில் விஞ்ஞானம் கண்டுபிடித்த அதிசூக்ஷ்மமான வஸ்துவை எலக்ட்ரான் என்றும் ப்ரோடான் (Electrons and Protons) என்றும் கூறுகின்றது. ஆனால் ஜைன தரி சனத்தில் கூறப்பட்டுள்ள கர்ம வர்க்கணைகளின் பர மாணுக்கள் இந்திரியங்களுக்குப் புலனாவதில்லை. அவற்றை மிக மிக சூக்ஷ்மமான பரமாணுக்கள் என்று கூறுவது மிகையாகாது. ஏனென்றால் அவை

எத்தனையோ மடங்கு எலக்ட்ரான் ப்ரோடான் களைவிட சூக்ஷ்மமானவை, எந்த வகையாலும் சூக்ஷ்ம தரிசக எந்திரமூலம் (Microscope) பார்வைக்குப் புல னுவதில்லை. இந்தத் தரிசனத்தினுடைய ஆத்மவாதம், தத்துவவாதம், கிரியாவாதம், தர்க்கவாதம், நியாய வாதம் முதலான எல்லா விஷயங்களும் விசாலமாயும் சூக்ஷ்மமாயும் இருப்பதால் அறிவுள்ள மாணுக்கன் இவற்றை அறியும் பொழுது இந்தத் தரிசனத்தின் ஸ்தாபகரும் போதகரும் சாமான்யமானவராக இருந் திருக்க முடியாது; ஆனுல் எல்லாம் உணர்ந்து எல்லா வற்றையும் அறிந்த ஒருவராக இருத்தல் வேண்டும்; மற்றவர்களால் இத்தகைய தரிசனம் ஸ்தாபிக்கப்பட முடியாது என்று நினைக்கின்றுன். சாதாரண ஜனங் கள் ஜைன தரிசனத்தின் பெருமையை உணர்வதில்லை. ஆனுல் புத்திமான்கள் இதனிடத்து அதிகப் பற்றுள்ள வர்களாய் இருக்கின்றனர். இந்த மதத்தின் முக்கிய மான அம்சங்களை அறிந்துகொள்வதற்கு அவர்களிடத் தில் ஆசை இருக்கின்றது. ஜைன சமயத்தைப்பற்றி அறிய விரும்புகின்ற பலர் எங்களுடைய ஜைனமிஷன் சொஸைடி என்னும் நிலையத்திற்கு ஜைன மதசம்மந்த மான புஸ்தகங்கள் அனுப்புமாறு வேண்டுகின்றனர். ஆனுல் ஜைன சமயத்தைப்பற்றி ஒரு சிறிய புஸ்தகமும் கிடைக்காததால் அவர்களுடைய இச்சையைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருந்தது. தெய்வாதீனமாக சென்ற வருஷம் நம்முடைய நகரத்திலுள்ளவர்களின் புண்ணி யோதயத்தால் பெரும் புகழ் பெற்றவரும் வியாக்கி யானம் செய்வதில் சிறந்தவருமான பூஜ்ய ஆசார்ய மகராஜ் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ 1008 ஸ்ரீமத் விஜய லக்ஷமண சூரி ஸ்வர்ஜி மகராஜ் அவர்களின் சாதுர் மாதம் இங்கே நடைபெற்றது. அவருடைய கருத்துக்கள் நிறைந்த

சொற்பொழிவுகளைக் கேட்டவர்கள் அவற்றை புஸ்தக ரூபமாக வெளியிடும்படி வேண்டினர். அந்த வேண்டு கோளுக்கிணங்க ஸ்ரீ ஆசார்ய மகராஜ் அவர்கள் தன்னு டைய பிரதான சிஷ்யரான முனி ஸ்ரீ கீர்த்தி விஜயஜியை இந்த வேலையைச் செய்யுமாறு பணித்தார். அவருடைய ஆக்ஞையின்படி ஜைன சமயத்தைப் பற்றிய எல்லா விஷயங்களையும் சுருக்கமாகவும் அழகாகவும் எழுதி இந்தச் சிறிய புஸ்தகத்தைத் தயா ரித்தார்கள். இதில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் யுக்தி சம்பந்தமாயும் அறிவுக்கு ஏற்றதாயும் இருப்பதால் எல்லா ஜனங்களும் இதை வாசித்துப் பயன்பெற முடியும். பூஜ்யமுனிஸ்ரீயைப்பற்றி இரண்டொரு வசனங்கள் சொல்லாமல் இருக்க முடியாது. ஏனென் ருல் சில நாட்களாக அவருடைய சத்சங்கத்தின் லாப மும் புகழத்தக்க அவருடைய புருஷார்த்தத்தின் அனு பவமும் போற்றத்தக்கன. அவர் உழைப்பில் உத்சாக முடையவராயும் கூர்மையான அறிவுடையவராயும் விளங்குகின்ருர். செய்யுள் இயற்றுவதோடு உரை நடை எழுதுவதிலும் மிகவும் திறமை வாய்ந்தவர். ஜைன மார்க்கபிரபாவனையிலும் தர்மத்தைப் பிரசாரம் செய்வதிலும் மிகவும் சிரத்தை கொண்டுள்ளார். அவர் எப்பொழுதும் உத்ஸாகத்தோடு முயற்சி செய்யும் சக்தி வாய்ந்தவர். இந்தப் புஸ்தகத்தை எழுதுவதற் காக அவர் எடுத்துக்கொண்ட சிரமத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தப் புஸ்தகத்தை வாசித்து ஜைன தர்மத்தின் ரகசியத்தை உணர்வதோடு ஜனங்கள் ஆத்ம தரிசனமாகிற லாபத்தை அடைவார்க ளென்று நான் நம்புகின்றேன்.

ஸ்ரீ புழல் தீர்த்தம்,
Red Hills,
P. O. Polal, Madras.

தர்மானுராகி
ரிஷப.

# முகவுரை.

உலகத்திலுள்ள எல்லா தரிசன சாஸ்திரங்களுள்ளும் ஜைன தர்மம் மிகவும் உத்தமமான தர்மமாகும். ஜைனதரிசனத்தின் சித்தாந்தத்தைப்பற்றிப் பேசவோ அல்லது எழுதவோ முயல்வது நிர்மலமான ஆகாசத்தில் பிரகாசிக்கும் சூரியனை விவரிக்கவோ அல்லது காட்டவோ முயல்வது போலாகும்.

ஜைன தருமம் முற்றிலும் அத்யாத்மிக தரிசனமாகும். இதில் வெவ்வேறு பிரகிருதிகளையுடைய பிராணிகளை அறிந்து அவற்றின் உன்னதிக்காக வெவ்வேறு வழிகள் காட்டப் பெற்றுள்ளன. இந்தச் சிறிய புஸ்தகத்தில் அவைகளின் பெயர்களை மட்டும் குறிப்பிடுவதாய்மட்டும் இருந்தால் கூட இடம் போதாது. இதனாலேயே மிகவும் முக்கியமான விஷயங்களான கர்மம், ஈஸ்வரன், கர்த்தா, ஆத்மா, சியாத்வாதம், ஆறு திரவியம், தவம் ஆகியவை சுருக்கமாக எளிதான நடையில் கூறப்பட்டுள்ளன.

எப்படித் தீபமானது இருட்டைப் போக்கடிக்கின்றதோ அப்படியே இந்தப் புஸ்தகத்தை எந்த எந்த இடத்தில் படிக்கின்றார்களோ அந்த அந்த இடத்தில் ஜைன தருமத்தின் மர்மத்தை அறிவதற்குத் தீபத்தைப் போன்று உதவுகின்றது.

ஜைன தரிசனத்தின் பிரசாரத்தாலும் ஜைன தர்மத்தின் சேர்க்கையாலும் மறுபிறப்பு, முன்பிறப்பு ஆகியவற்றில் இப்பொழுது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அம்மாதிரியே ஜைன தர்மத்தின் வேறு முக்கிய சித்தாந்தங்களும் அநேக ஜனங்களுடைய மனதில் பதிந்

துள்ளன. அவற்றுள் முக்கியமாக ஜனங்கள் அஹிம்சையின் விசேஷகுணத்தை நன்ருக அறிந்து பாராட்டுகின்ருர்கள்.

ஜைன தர்மத்தை "ரத்தினங்களின் பண்டார் (பெட்டி)" என்று உவமை கூறத்தக்கதாய் இருக்கின்றது. காரணம் என்னவென்ருல் சியாத்வாதம், கர்ம சித்தாந்தம், பஞ்ச மகாவிரதம் முதலானவை இதனுடைய பிரகாசம் நிறைந்த ரத்தினங்களாகும். இவை தாங்களே பிரகாசம் செய்து கொள்வதோடு தங்களின் ஒளியால் பிற வஸ்துக்களையும் பிரகாசிக்கச் செய்கின்றன. அதனுடைய பிரசாரம் மிகவும் அவசியமானது. அதைச் செய்வதற்கு இந்தப் புஸ்தகம் பிரயோஜனமானது.

இந்த விஷயத்தில் பூஜ்ய முனிராஜ் ஸ்ரீ கவிகுல திலக கீர்த்தி விஜயஜிமகராஜ் அதிகப் பிரீதியும் சிரத்தையும் கொண்டுள்ளார்கள். அவர் பிரயாணம் செய்யும் பொழுதும், ஸ்திரமாக ஓர் இடத்தில் சாதுர்மாசத்தைக் கழிக்கும் பொழுதும் உற்சாகத்தோடு கூடிய பிரசங்கங்களில் ஜைன சமயத்தின் முக்கிய சித்தாந்தங்களை விளக்காமல் போவதில்லை.

தற்காலத்தில் உண்டாகும் அநேக கேள்விகளுக்கு சமாதானம் ஜைனதரிசன சித்தாந்தத்தில் கிடைக்கின்றது. அதைத் தரிசன சாஸ்திரிகள் மட்டுமல்லாமல் சமாஜ சாஸ்திரிகளும் ஏற்றுக் கொள்கின்ருர்கள். மிகவும் ஆச்சரியத்தைத் தருகின்ற விஷயம் என்னவென்ருல், விஞ்ஞானிகள் அநேக வருஷங்களாக லக்ஷக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து ஆராய்ச்சி நடத்திக் கண்டுள்ள விஷயங்கள் ஜைன தரிசனத்தின்

ஞானி புருஷர்களால் முன்னடியே விளக்கப்பட்டுள்ளன.

இந்தச் சிறிய புஸ்தகத்திற்கு ஒரு நீண்ட முகவுரை அவசியமில்லை.

இந்தப் புஸ்தகத்தின் முடிவில் பிரசித்தி பெற்ற சிறந்த பண்டிதர்கள், ஜைன தரிசனத்தின் முக்கியக் கொள்கைகள், அவற்றின் பெருமை ஆகியவற்றைப் பற்றி கூறியுள்ள அபிப்பிராயங்கள் தரப்பெற்றுள்ளன. அவைகளைப்படித்த நான் பூஜ்ய ஸ்ரீ முனிராஜ் கீர்த்தி விஜயஜி அவர்களுக்கு இந்த உபயோகமுள்ள முயற்சிக்காக என்னுடைய நன்றியறிதலான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திவ்ய.

# இரண்டு சொற்கள்

எப்படிச் சமுத்திரத்தினுடைய ஆழத்தை நிரப்புவது முடியாத காரியமோ அதைவிட மிகவும் சிரமமான காரியம் ஜைன சித்தாந்தத்தை ஒரு புஸ்தகத்தில் விளக்க முயல்வது.

ஜைன இலக்கியம் மிகவும் விசாலமானது. ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் எழுதப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான ஸ்லோகங்கள் இந்த விஷம காலத்தில்கூட நம்மால் காப்பாற்றப்பட்டு வருகின்றன. இவற்றை அறிவதற்காக ஒழுங்கான முறையில் படித்தல் அவசியமாக இருக்கின்றது.

நான் பூஜ்ய குருதேவ் அவர்களுடன் மகாராஷ்டிரம், கர்நாடகம் ஆகிய தேசங்களில் கால் நடையாக செல்கின்ற காலத்தில் எல்லா ஜனங்களும் எளிதில் படித்துத் தெரிந்துகொள்ளும் வண்ணம் ஜைன சமயத்தைப்பற்றி ஒரு சிறிய புஸ்தகம் எழுதி வெளியிட்டால் நலமாயிருக்குமென்று தோன்றியது. ஜைன தருமம் என்பது என்ன, அதனுடைய சித்தாந்தம் எவ்வளவு விசாலமானது, ஆத்மா, கர்மம் ஆகிய விஷயங்களைப் பற்றிச் சுலபமாக அறிந்துகொள்ளவும், ஜைன தருமத்தை எல்லோரும் தெரிந்து கொள்ளவும், ஜைன சமயத்தைப்பற்றி அநேகர் கொண்டுள்ள தவறான அபிப்பிராயங்களை விலக்கவும், அவர்கள் கொண்டுள்ள சந்தேகங்களுக்குச் சமாதானம் தரவும், இந்தச் சிறிய புஸ்தகம் எழுதி வெளியிடப்பட்டுள்ளது. சில பேர்களாவது ஜைன தர்மத்தின் விசால சித்தாந்தத்தை நன்கு அறிந்து உண்மைப் பொருளை உணர்ந்து ஆத்ம

உன்னதிக்காகப் பரிசுத்தமான மார்க்கத்தில் செல்ல வேண்டும் என்பது எமது கோரிக்கை.

மகாராஷ்டிரம், கர்நாடகத்தைப் போன்று வேறு மாகாணங்களிலும் இந்தப் புஸ்தகம் உபயோகப்பட வேண்டுமென்று குஜராத்தி, ஹிந்தி, இங்கிலிஷ், தமிழ் ஆகிய பாஷைகளில் மொழி பெயர்த்து இருபதாயிரம் பிரதிகள் வெளியிட நிச்சயம் செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு இலக்கியப் பற்றுள்ளவர்கள் நல்ல பொருளுதவி செய்துள்ளார்கள். அவர்களுதவி மிகவும் பாராட்டத் தக்கது. அவசிய மேற்பட்டால் வேறு பாஷைகளிலும்கூட இதை மொழி பெயர்த்து அச்சிட முயற்சி செய்யப்படும்.

நான் எவ்வகையிலும் திறமையுள்ள எழுத்தாளனல்லன். என்னுடைய சிற்றறிவைக்கொண்டு இந்த விஷயத்தைத் தொடங்கி பூஜ்ய குருதேவ் அவர்களின் ஒப்பற்ற ஆசீர்வாதத்தினுல் எழுதி முடித்தேன். ஜைன தர்மத்தைப் பிரசாரம் செய்வதற்கு எனக்குள்ள ஆற்றலினுல் இந்த புஸ்தகத்தை எழுதினேன். இந்தப் புஸ்தகத்தை முற்றிலும் அழகு பெற செய்வதற்குப் பூஜ்ய குருதேவ் அவர்கள் பொருத்தமான யோசனைகளைச் சொன்னுர்கள். இந்தப் புஸ்தகத்தில் ஏதாவது நல்ல விஷயங்கள் இருக்குமானுல் அவை எல்லாம் பூஜ்ய குருதேவ் அவர்களின் ஆசீர்வாதத்தின் பலனுகும். அவர்களுக்கு நான் எவ்வளவு நன்றி செலுத்தின போதிலும் அது மிகவும் அல்பமே ஆகும்.

வித்வான்கள் இந்தச் சிறிய புஸ்தகத்தை வாசித்து என்னுடைய உற்சாகத்தை அபிவிருத்தி செய்வார்கள் என்னும் நோக்கத்துடன் இதைப் பூஜ்யகுருதேவ் அவர்

களின் பாத கமலங்களில் சமர்ப்பித்து நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

பூஜ்யபாத தக்ஷிணதீபக் ஆச்சார்ய, குருதேவ் ஸ்ரீமத் விஜயலக்ஷ்மண சூரிஸ்வர்ஜி அவர்களின் சரண ரேணு,

முனி கீர்த்தி விஜய.

மதராஸ் தாதாவாடி,
வி. சம். 2010.
மகசர்வத் 10.
ஸ்ரீ பார்சுவநாத் ஜன்ம
கல்யாணம்.

## மிகவும் பெருமைவாய்ந்த நவகார மந்திரம்.

நமோ அரிஹந்தாணம்
நமோ ஸித்தாணம்
நமோ ஆயரியாணம்
நமோ உவஞ்ஞாயாணம்
நமோ லோயே சவ்வ சாஹூணம்
ஏஸோ பஞ்ச நமுக்காரோ
சவ்வ பாவப் பணுசணோ
மங்கலாணம் ச ஸவ்வேஸிம்
படமம் ஹவயி மங்கலம்.

மேலே எழுதியுள்ளபடி நவகார மந்திரம் ஒன்பது பதங்களையுடையது. இந்த நவகார மந்திரம் பதினுன்கு பூர்வங்களின் ஸாரரூபமாகின்றது. இந்த மந்திரம் நினைத்தற்கு அரிய பெருமையையுடையது. இத னுடைய மகிமையினுல் தேவர்களும் அசுரர்களும் கூட வசியப்படுகின்ருர்கள். எல்லா எண்ணங்களும் பலித

மாகின்றன. இடையூறுகளும், ஆபத்துக்களும் வெகு தூரம் ஓடிப்போகின்றன. துன்பங்கள் நாசமாகின்றன. இந்தச் சிந்தாமணி ரத்னம், கல்பக விருக்ஷம், காமதேனு விஞல் அதிகமான இச்சைகள் பூர்த்தியாகின்றன. இந்த மகாமந்திரத்தைத் தியானிப்பதால் எளிதில்போக் கடிக்க முடியாத கர்மங்கள் நாசமடைகின்றன. எல்லா விதமான பாவங்களும் நாசமாகின்றன. இந்த லோகத் திலும் பரலோகத்திலும் சுகமும் அபூர்வமான ரித்தி களும் சித்திகளும் கிடைக்கின்றன. வலிமையுள்ள கருமங்களும் அழிகின்றன. ஜென்ம ஜென்மங்களில் உண்டான பாபங்கள் முற்றிலும் அழிகின்றன. பிறப்பு இறப்பின் தொடர்பு அறுகின்றது. ஆத்மா தீய கதி யின் சகிக்க முடியாத துக்கத்தினின்றும் தடுக்கப்படு கின்றது. ஆத்மா கர்மத்தினின்று விடுபட்டுச் சுத்த மாயும் நிர்மலமாயும் பிரகாசிக்கின்றது. அதிகாலை யில் ஜபிப்பதால் நாள் முழுவதும் மங்கள மயமா கின்றது. இந்த மந்திரத்தைக் கேட்பதால் ஜென்மம் பயனை அடைகின்றது. மரண சமயத்தில் இதை ஞாப கத்தில் வைப்பதால் நல்லகதி கிடைக்கின்றது. இத னுடைய மாகாத்மியத்தை எவ்வளவு வர்ணித்தாலும் அது கொஞ்சமே ஆகும். இந்த மந்திரத்தின் ஒவ் வோர் எழுத்தையும் ஜெபிப்பதனுலும் கூட கணக் கற்ற வருஷங்களில் செய்த கொடிய கருமங்கள் நாச மடைகின்றன. மனதினுலும் வசனத்தினுலும் காயத்தி னுலும் ஒன்றுபட்டு இந்த மந்திரத்தை ஜெபித்தல் வேண்டும். இதை ஜெபிப்பதில் ஐக்கியப்பட்டு அதனேடு தன்மயமாகவேண்டும். இதில் திடமாக நிற்றல் வேண் டும். நடக்கும் பொழுதும், இருக்கும் பொழுதும் இந்த மந்திரத்தை ஜெபித்துக்கொண்டே இருத்தல் மிகவும்

நல்லது. எந்தப் பலனையும் விருமபாமல் ஜபித்தல் வேண்டும்.

இந்த மந்திரத்தில் ஆத்ம குணங்களால் நிறைந்த மிகவும் உத்க்ருஷ்டமான சித்தர்களுடையவும், முக்தி மார்க்கத்தை அனுஷ்டிக்கின்ற குணத்தில் சிறந்த மகா புருஷர்களுடையவும் ஸ்துதி அடங்கியுள்ளது. இதில் குணங்களைப்பற்றிய ஸ்தோத்திரம் உள்ளது. தனிப் பட்ட ஒருவரைப்பற்றிய ஸ்துதி இதில் இல்லை. இந்த மந்திரம் மகா சமுத்திரத்திற்குச் சமானமான விசாலத் தன்மையை உடையது. ஆத்மாவை மேலும் மேலும் பிரகாசம் செய்வதற்குச் சம்சாரத்தில் என்ன என்ன உயர்ந்த பதங்கள் இருக்கின்றனவோ அந்த பதங்க ளெல்லாம் இந்த மகா மந்திரத்தில் அடங்கியுள்ளன. இதனால் இந்த மகாமந்திரம் எல்லோருக்கும் சமான மானதாய் பெருமையும், சுகத்தையும் தரக்கூடியதாய் இருக்கின்றது.



5—2—'54ல் பெரம்பூர் 'தயாஸதன்' - பிச்சைக்காரர் விடுதி திறப்பு விழாவின்போது மேன்மை தங்கிய ஜைனாச்சாரிய ஸ்ரீ விஜய் லக்ஷ்மண்சூரீஸ் வர்ஜி அவர்களைச் சென்னைப் பிரதமர் C. ராஜகோபாலாச்சாரியார் தரிசிக்கும் தோற்றம்.

நமோ ஜிநாணம்

# ஆருஹத தர்ம விளக்கம்

---

## ஜைன தர்மம்

இவ்வுலகில் ஜைன தர்மத்தினுடைய இடம் எல்லாவற்றைக்காட்டிலும் அதிக மகத்துவமாய் இருக்கின்றது. ஜைன தர்மம் அநாதியாய் உள்ளது. இந்த விஷயம் "ஜைன" என்னும் சொல்லிலிருந்து நன்கு விளங்குகின்றது. ராகத்துவேஷங்களை (விருப்பு, வெறுப்புக்களை) ஜெயித்தவனுக்கு 'ஜினன்' என்று பெயர். எவ்வாறெனில் ஜின என்னும் சொல் ராகத் துவேஷாதீன் சத்ருன் ஜெயதீ தி ஜின: என்பதிலிருந்து தெரிகிறது. விருப்பு வெறுப்புக்கள் ஆகிய அந்தரங்க சத்ருக்களை எவன் ஜெயித்தானோ அதாவது, அவைகளை வேரோடுகளைந்து எறிந்தானோ அந்த ஆத்மாவைப் பெற்றவன் ஜினன் என்று கூறப்படுகிறான். வீதராகன், சர்வக்யன், சர்வசக்திமான், பரமாத்மா ஆகியபெயர்களும் ஜினனுக்கு உண்டு என்பது இதனால் சித்தியாகின்றது.

அவரால் போதிக்கப் பெற்றதும், ஸ்தாபிக்கப் பெற்றதுமான மதத்திற்கு ஜைன தர்மம் என்று பெயர். இதனாலேயே அந்த தர்மத்தை அனுஷ்டிக்கின்றவர்கள் ஜைனர்கள் என்று கூறப்படுகின்றார்கள்.

ஜின என்னும் சொல் தனிப்பட்ட ஒருவரைக குறிப்பதன்று. ஆனல் ஜாதி அல்லது கூட்டத்தைக் குறிக்கின்றது. ஜாதி என்னும் சொல் அனுதியாகவே இருக்கின்றது. ஜின என்னும் சொல் அனுதியாய் இருப்பது போலவே ஜினனல் விளக்கப்பட்ட மதமும் அனுதியாகவே இருக்கின்றது. இது சுயமாகவே விளங்குகின்றது. எப்படி கிருஸ்துமதம் கிறிஸ்துவினல் உண்டாயிற்ரே, பௌத்த தர்மம் கௌதம புத்தரால் உண்டாயிற்ரே அப்படியே வேறு சில மதங்களும் சில முக்கிய நபர்களால் உண்டாயின. ஆனல், இந்த மாதிரி யாக ஜைனமதம் தனிப்பட்ட ஒருவரால் ஆரம்பிக்கப் படவில்லே. அப்படி யாராவது ஒருவரால் ஆக்கப்பட் டிருந்தால் அது பௌத்த தர்மத்தைப் போலவே மகா வீர தர்மம், ரிஷபதர்மம் என்னும் பெயர்களால் தெரிய வரும். ஆனல் இது மகாவீரதர்மம் அல்லது ரிஷப தர்மம் என்று அழைக்கப்படாமல் ஜைனதர்மம் என்றே கூறப்பட்டு வருகின்றது. இதனல் நாம் **ஜைன தர்மம் அனுதியாய்** உள்ளது என்று நன்கு அறிகின்ருேம்.

ஜைன தர்மத்தின்படி காலம் உத்ஸர்ப்பிணி என்றும் அவஸர்ப்பிணி என்றும் இரண்டு பிரிவுகளே உடையது. உத்ஸர்ப்பிணி காலத்திலும் அவஸர்ப் பிணி காலத்திலும் இருப்பத்து நான்கு, இருப்பத்து நான்கு தீர்த்தங்கரர்கள் தோன்றுகின்ருர்கள். தீத்தங்கரர், ஜினர், அரிஹந்தர், ஜினேஸ்வரர் முதலிய பெயர்களால் அறியப்படுகின்ருர். இறந்த காலத்தில் இம்மாதிரி யாக எண்ணிறந்த இருபத்துநான்கு தீர்த்தங்கரர்கள் இருந்தார்கள். வருங்காலத்தில் கூட இம்மாதிரியே எண்ணிறந்த இருபத்து நால்வர் தோன்றுவார்கள். தீர்த்தங்கரருடைய ஆத்மா ஜனன காலத்திலிருந்தே

மேலான ஞானியாயும் மகா சௌபாக்கிய சாலியாகவும் இருக்கின்றது.

இந்தத் தீர்த்தங்கர தேவர்கள் இராஜ்ய பதவியை தியாகம்செய்து. வைபவங்களை யெல்லாம் விட்டு, தீக்ஷையை (சன்னியாசத்தை) ஏற்றுக் கொண்ட பிறகு முன்னமேயே தங்களிடம் உள்ள கடுமையான கருமங்களை நாசம் செய்வதற்காக சில வருஷங்கள் வரை கோர தபம் செய்கின்றார்கள். அநேக கடுமையான விரதங்களை தரிக்கின்றார்கள். தங்களுக்கு ஏற்படும் பயங்கரமான துன்பங்களை மிகவும் பொறுமையோடு சகித்துக்கொள்கிறார்கள். எப்பொழுதும் ஆத்மத்தியானத்திலேயே இருக்கின்றார்கள். இத்தகைய கடுமையான தவத்தினால் ஜன்ம ஜன்மாந்திரங்களில் உண்டான பாபங்களை நாசஞ் செய்கின்றார்கள், கர்மங்களை தகித்து பஸ்மமாக்கி சத்துருக்களையும் மித்துருக்களையும் சமமாகப் பாவித்து வீதராக நிலையை அடைந்து கேவலக்ஞானத்தையும் கேவல தரிசனத்தையும் அடைகின்றார்கள். அவர்களிடத்து சம்பூர்ண ஞானம் உற்பன்னமாகின்றது. அந்த ஞானத்தினாலும் தரிசனத்தினாலும் ஸ்வர்க்க, மத்திய, பாதாள ஆகிய மூன்று லோகங்களிலும், இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் க்ஷணந்தோறும் மாறிக்கொண்டே வருகின்ற பதார்த்தங்களின் தன்மைகளையும் பரிவர்த்தனமாகும் உலகத்தையும் அறிகின்றார்கள்; பார்க்கின்றார்கள்.

இந்த சம்பூர்ண ஞானியான பரமாத்மாவினுடைய ஞானத்தினால் அறியப்படாத வஸ்து ஒன்றுமில்லை. “யார் எங்கிருந்து வந்தார்கள். எங்கே போவார்கள். அனந்த காலத்திற்கு முன்னமே அவர்கள் என்ன என்ன

நிலைமைகளில் இருந்தார்கள், அவர்களுக்கு எப்பொழுது மேன்மை ஏற்படும்'' ஆகிய இத்தகைய விஷயங்களை அவர்கள் உள்ளங்கை நெல்லிக்கனி போலப் பார்க்கின்றார்கள், அறிகின்றார்கள்.

பரமாத்மா விதேஹமுக்தன் என்றும் ஜீவன் முக்தன் என்றும் இருவகைப்படும். ஆத்மாவின் குணங்களை கெடுக்கின்ற ஞானாவரணீயம், தர்சனாவரணீயம், மோஹனீயம், அந்தராயம் ஆகிய நான்கு காதி கர்மங்களை முற்றிலும் நாசம் செய்தவரும் கடைசி சரீரத்தோடு கூடியவரும் ஆகிய பரமாத்மா ஜீவன் முக்தன் எனப்படும். இந்த ஜன்மத்திற்குப் பிறகு அவர்கள் மறுபடியும் ஜன்மம் எடுக்கிறதில்லை. நான்கு காதிகர்மங்களையும் நான்கு அகாதி கர்மங்களையும் (நாமகர்மம், கோத்ர கர்மம், ஆயுஷ்ய கர்மம், வேதனீயகர்மம்) ஆகிய எட்டு கர்மங்களையும் அடியோடு அழித்த பரமாத்மா விதேஹமுக்தன் அதாவது சித்தபரமாத்மா என்று அறியப்படும். சரீரத்தையுடைய ஜீவன் முக்த பரமாத்மா (ஜினேஸ்வர தேவன்) அகில உலகத்தின் சம்பூர்ண சொரூபங்களை அறிந்து உலகத்தின் க்ஷேமத்திற்காக எல்லாச் சம்சார ஜீவன்களின் நன்மைக்காக உண்மையான வழியைக் காட்டுகின்றார். அஹிம்ஸை, சத்தியம், அஸ்தேயம் (களவின்மை) பிரம்மசரியம், அபரிக்கிரகம் (மிகு பொருள் விரும்பாமை) ஆகியவற்றை போதிக்கின்றார். ஆதி, வியாதி, உபாதி ஆகிய மூன்றுவித தாபங்களினால் எரிக்கப்படும் ஜீவன்களுக்கு அமிர்த வாணியினால் அபூர்வ உபதேசத்தைச் செய்கின்றார்கள். விஸ்வ சாந்திக்காக உண்மையான வழியைக் காட்டுகின்றார்கள். உண்மையான சுகம் இத்தகையது என்று விளக்குகிறார்கள். அஞ்ஞான ரூபமாகிய அந்த

காரத்தை, தூரம், நெடுந்தூரம் விலக்குகின்றூர்கள். இவைகளுக்குப் பிறகு மோக்ஷ உலகத்தின் சாஸ்வத மான சுகம் இன்னதென்று விளக்குகிறுர்கள்.

## ஆச்சரியமான விசாலமுடைமை

ஜைன தர்மத்தின் சித்தாந்தம் வீதராக சர்வக்கிய ஞல் போதிக்கப் பெற்றது. ஆகையால், அது மிகவும் விசாலமாயும் சத்தியத்தோடு கூடியதாயும் இருக்கின் றது. இந்தக் காரணத்திஞல் இதனுடைய எல்லாருக் கும் உபயோகமாகும் தன்மை நன்கு விளங்குகின்றது. இந்த தர்மம் மிகவும் சிறிய பிராணியைக் கூட ரட்சணை செய்யும்படி கட்டளை தருகின்றது.

ஜகத்திலுள்ள எல்லாப் பிராணிகளும் உயிரோடு வாழ்வதற்கு இச்சிக்கின்றன என்பது ஜைன சித்தாந் தத்தின் கொள்கை. எந்த ஜீவனும் மரணத்தை விரும்பு வதில்லை. எல்லாம் சுகத்தையே விரும்புகின்றன. துக்கம் விரும்பப்படாதது. எப்படி அபூர்வமான ரித்திகளையும் சித்திகளையும் உடைய இந்திரன்கூட ஜீவித்திருப்ப தற்கு விரும்புகிறுனே அப்படியே மலத்தில் நெளிகின்ற புழுகூட மலத்திலேயே இருந்துகொண்டு ஜீவித்திருக்க ஆசைப்படுகின்றது. இவ்விரண்டு வகை ஜீவன்களும் சமானமாகவே மரணத்திற்குப் பயப்படுகின்றன. ஆகை யால் ஒவ்வொரு ஜீவனும் மற்ற ஜீவன்களை ரக்ஷிக்க வேண்டும். ஓரறிவுடையதாஞலும், ஐயறிவுடைய தாஞலும், மிருகமாஞலும், மனிதனுஞலும் ஓரறிவு முதல் ஐயறிவுவரை உடைய எல்லா ஜீவன்களையும் ரக்ஷித்தல் வேண்டும். நிலம், நீர், நெருப்பு, காற்று, வனஸ்பதி (தாவரம்) ஆகியவற்றிலுங்கூட ஜீவன் இருக்கின்றது. நம்மிடத்தில் ஆத்மா இருப்பது

போலவே எல்லாரிடத்திலும் ஆத்மா இருக்கிறது. ஜீவன் சிறிதும் பெரிதும் ஆகக்கூடிய தன்மையை யுடையது. எறும்பினுள் இருக்கும் ஆத்மா யானையுள் இருக்கும் ஆத்மாவினின்றும் சிறிதும் வேருனதன்று. யானையில் இருக்கும் ஆத்மா கரும பந்தந்தின் காரணத் தால் ஒரு சமயம் எறும்பு ரூபத்தை எடுக்கக்கூடும். நிலத்தைக் காயமாகவுடைய ஜீவன் நீரை காயமாக வுடைய ஜீவனுகக்கூடும். நரகஜீவன் மனுஷ்ய கதி யைப் பெறுகின்றது. கர்ம பந்தத்தின் காரணத்தினுல் அந்த ஆத்மாக்கள், ஓரறிவு முதல் ஐயறிவு வரை யுடைய ஜீவ யோனிகளைத் தரிக்கின்றன.

எல்லாருடைய ஆத்மாவும் சமானமானது. எப்படி நமக்கு துக்கம் உண்டாகின்றதோ அப்படியே எல்லா ருக்கும் துக்கம் உண்டாகின்றது. நாம் எப்படி சுகத்தை விரும்புகின்ருேமோ அப்படியே எல்லா பிராணிகளும் சுகத்தை மிகவும் விரும்புகின்றன. இதனுல் எல்லா ஜீவன்களையும் சமானமாக ரக்ஷித்தல் வேண்டும். நமக்கு துன்பம் செய்கின்ற ஜீவன்களைக் கொல்வதால் பாபமில்லை என்று சொல்கின்ற வித்தியாசமும் கூடாது. இவ்வாறு சொல்வதுகூட ஹிம்ஸை வசனமாகும். இது சர்வக்கிய பரமாத்மனுடைய கட்டளையாகும். அத னுடைய விரிவான பொருள் இஃதாகும். நமக்கு எந்த ஜீவனுவது கெடுதியைச் செய்து துக்கத்தைக் கொடுத் தாலுங்கூட அதையும் ரக்ஷித்தல் வேண்டும், அது மிருகமாஞலும் சரியே மனுஷ்யனுனலும் சரியே.

ஜைன தர்மம் எவ்வளவு விசாலமானது! எவ் வளவு உன்னதமானது! எல்லா உலகத்தின் க்ஷேமத் திற்காக, மிகவும் சூக்ஷ்ம பிராணியையும் ரக்ஷிக்க வேண்டும் என்னும் உபதேசமும், கெடுதியைச் செய்

கின்றவர்க்கும் கெடுதியைத் தேடுகின்றவர்க்கும் ரக்ஷணையை அளிப்பதும், அவர்களுக்கும் நன்மையே உண்டாகவேண்டும் என்கிற எண்ணமும், ஜினேஸ்வர தேவனுடைய உபதேசத்தில் அடங்கியுள்ளன. எந்தத் தேசமாயிருந்தாலும் சரி, எந்தப் பிறப்பாயிருந்தாலும் சரி, எங்கே வசித்தாலும் சரி மூர்க்காதி மூர்க்கருள் தீங்கிழைத்தவர்களுள்ளும், மிகவும் கொடிய தீங்கு இழைத்த பிராணிக்குக்கூட ரக்ஷணையைச் செய். சர்வக்கிய பரமாத்மனன ஜினேஸ்வர தேவனுடைய ஒரே உபதேசம் இதுவாய் இருந்தது; இப்பொழுதும் இருக்கின்றது.

நம்முடைய காலில் ஒரு முள் தைக்கிறது. அப்பொழுது நாம் 'ஹாய்' என்று துடிக்கிறோம். மிகவும் வேதனைப்படுகின்றோம். அப்படி இருக்கும் பொழுது மற்ற பிராணிகளுக்கு எப்படித் துன்பம் செய்யலாம்? என்ன? அவைகளுக்குத் துக்கம் உண்டாகாதா? நமக்கு எப்படி துக்கம் உண்டாகின்றதோ அப்படியே எல்லாருக்கும் துக்கம் உண்டாகின்றது. எல்லாவற்றைக்காட்டிலும் மிகவும் விலைமதிக்க முடியாதது ஜீவன் அல்லது பிராணன் ஆகும். கோடிக்கணக்கான ரூபாய் செலவு பண்ணின போதிலும் சென்று விட்ட ஜீவனை மறுபடியும் திரும்பவும் அடைய முடியாது.

மனிதன் மற்றப் பிராணிகளைவிட அறிந்தவனுயும் சமர்த்தனுகவும் இருக்கின்றுன். இதனுல் பலமற்ற ஜீவன்களை ரக்ஷிப்பது அவனுடைய முதல் கடமையாகும். கேவலம் தன்னுடைய இந்திரிய சுகத்திற்காக மற்றப் பிராணிகளுடைய சுகத்தை வஞ்சிப்பது மிருகச் செயலாகும்.

தம்முடைய சுக துக்கங்களைத் தெரிவிக்க முடியாத ஊமைப்பிராணிகளை ஜனங்கள் தங்களுடைய நன்மைக்காகவும் தங்களுடைய உணவின் பொருட்டாகவும் கொலை செய்வது பயங்கரமான அநியாயமாகும். இதில் மனிதத்தன்மை இல்லை. அசுரத்தன்மையே உள்ளது.

இவ்வாறு ஜினேஸ்வர தேவர்கள் தயையின் மேன்மையுள் மேன்மையான ஸ்வரூபத்தை விளக்கியுள்ளார்கள்.

பொய் சொல்வதை விட்டுவிடு. நிதானமாகவும் பிரியமாகவும் சத்தியமாகவும் பேசு. பொய் பேசுவதால் வாய் பரிசுத்தத் தன்மையை இழக்கின்றது. மனிதர்கள் விஸ்வாசத்தை விடுகின்றூர்கள். ஹிம்ஸையைப் போன்றே பொய்யும் ஒரு மகா பாவமாகும். திருடுவதை விட்டுவிடு. யாரையும் மோசம் செய்யாதே. சட்டைப் பையைக் கத்தரிப்பதும், பூட்டை உடைப்பதும், பிறருடைய பொருளை அபகரித்துச் செல்வதும் ஆகிய இவையெல்லாம் பெரிய பாப காரியங்களாகும்.

பொய்யான தஸ்தாவேஜுக்களை தயார் செய்வதும் பொய்சாட்சி சொல்வதும், பாபத்தை உபதேசிப்பதும் ஆகிய இவற்றை விட்டுவிட வேண்டும். பிரம்மசர்யத்தை அனுஷ்டிக்க வேண்டும். ஆத்ம ஞானத்தை விருத்தி செய்வதற்குப் பிரம்மசர்யம் ஒரு விசேஷமான சாதனமாகும். தேவர்களும், அசுரர்களும் சுத்த பிரம்மசாரிக்குத் தாசர்களாகின்றனர். அவனுடைய வார்த்தைக்கு மதிப்புண்டாகிறது. இவ்வுலகில் பெரிய மனிதனுகவும், சிறந்த மனிதனுகவும் அவன் எண்ணப் படுகின்றுன்.

அதிகமான பொருளை சேர்க்காதே. அவசியமான பொருள்களையும் மட்டுப்படுத்து. எந்த வஸ்து

வின்மேலும் மமதையோடு கூடிய ஆசையை வைக்காதே. திருப்தியோடு கூடிய மனிதன் எப்பொழுதும் சுகமாய் இருக்கின்முன். ஆகையால், அவசிய வஸ்துக்களிலும் எவ்வளவு குறைக்கப்படுகின்றதோ அவ்வளவு சுகமும் சாந்தியும் உண்டாகின்றன. தற்கால உலகத்தில் அபரிமிதமான பணம் என்ன என்ன விஷம காரியங்களைச் செய்கின்றது என்பது நமக்கு விளங்கவில்லை. ஆகையால் ஜைன தர்மத்தினுடைய பரிக்கிரக பரிமாண விரதம் ஒரு தேசத்திற்கு மட்டுமல்ல, எல்லாத் தேசங்களுக்கும் உபகாரமானது.

இரவில் உண்பதை விட்டுவிடு. இரவில் உண்பதால் அநேக ஜீவன்களுக்கு ஹிம்ஸை உண்டாகின்றது. புத்தியும் கெட்டுப்போகின்றது. அடுத்த ஜென்மத்தில் கெட்ட கதிக்குப் போகும்படி நேரிடுகின்றது. நடந்து செல்லும்பொழுது கீழே பூமியைப்பார்த்து நிதானமாக செல்ல வேண்டும். ஜலம் முதலியவற்றை வடிகட்டி உட்கொள்ளவேண்டும். கோபம், கர்வம், மாயை, லோபம், விருப்பு, வெறுப்பு ஆகிய இவையெல்லாம் பயங்கரமான சத்துருக்கள். அவற்றைக் குறைத்துக்கொள்.

யாரையும் நிந்தனை செய்யாதே. யாரிடத்தும் பொருமை கொள்ளாதே, ஆத்மாவைத் தெரிந்துகொள். வியர்த்தமாக சண்டை சச்சரவுகளைச் செய்யாதே. பரஸ்பரம் சிநேக பாவத்தோடு இரு. யாருக்கும் கெடுதி செய்யாதே. குணத்தோடு கூடியவர்களைப் பார்க்கும்பொழுது சந்தோஷங்கொள். துக்கமுள்ளவர்களைப் பார்க்கும்பொழுது அவர்களுடைய துக்கத்தை நீக்குவதற்கு முயற்சி செய். நீசர்கள், அதர்மிகள், பாபிகள் ஆகியவர்களின் செய்கைக்காக அவர்களை வெறுக்காமல் அவர்களிடத்து நடுநிலைமையோடு இரு. அவர்கள்

எதையும் தெரிந்துகொள்ளக் கூடியவர்களாயிருந்தால் அவர்களுக்கு உபதேசம் பண்ணு. இல்லாவிடில் அவர்களைப் புறக்கணித்துவிடு. ஒவ்வொரு பிராணியிடத்தும் சிநேக பாவத்தோடு இரு. உலகத்திலுள்ள எல்லா ஜீவன்களும் நம்முடைய நண்பர்களுக்கு சமானமானவைகள். ஆகையால் எதையும் கொல்லாதே. எதற்கும் இடையூறு செய்யாதே. எதற்கும் துக்கம் விளைவிக்காதே.

நாம் யாருக்காவது துக்கம் விளைவித்தால் அதனுடைய கொடிய பலனை நாம் ஜென்ம ஜென்மாந்திரங்களில் அனுபவிக்க நேரிடும். அநேக தடவை இறக்கும்படியாகும். ஆகையால் சுகத்தை விரும்புகின்றவர்கள் எல்லாருக்கும் சுகத்தையே செய்தல்வேண்டும். எல்லோருக்கும் சுகத்தைச் செய்ய எண்ணம் கொள்வதால் நம்முடைய ஆத்மா பூரண சுகி ஆகின்றது.

நம்மிடத்தில் குறைவான வஸ்துக்கள் இருந்தபோதிலும் அதிலிருந்து கொஞ்சமாவது தானம் செய்தல் வேண்டும். தானத்தையும் தர்மத்தையும் மறத்தல் கூடாது. ஏழைகள் துக்கிகள் ஆகியவர்களின் நிலைமையை உயரச் செய். இப்பொழுது சொல்லிவந்த எல்லாக் குணங்களையும் வாழ்க்கையில் அனுஷ்டித்தால் இந்த விலையற்ற மானிட சரீரத்தை கொண்டதற்கு கொஞ்சம் பலன் கிடைத்ததாகும். மறுமுறையும் இந்த மனித சரீரம் கிடைப்பது மிகவும் துர்லபமாகும். இத்தகைய தேவ - துர்லபமான ஜீவனை அடைந்து ஆத்மாவை அறிந்து ஜீவனை நிகரற்றதாகச் செய்தல் வேண்டும்.

# ஜைன சாது

ஜைன சாதுவாக விரும்புகின்ற ஒருவன் ஆயிரம், லக்ஷம் கணக்கான செல்வம், வீடு, தோட்டம், பங்களா ஆகிய வஸ்துக்களையும், தாய், தந்தை, சகோதரன், சகோதரி, புத்ர, புத்திரிகள் ஆகிய சொந்த பந்துக்களையும் விட்டுவிட்டு அவற்றின் மேல் உள்ள மோகத்தை நீக்கி, க்ஷணத்தில் மறையும் வெறுக்கத்தக்க சிற்றின்பத்தினின்றும் விலகி, முக்தி மார்க்கத்தில் செல்லுவதற்காக ஜினேஸ்வர தேவனால் உபதேசிக்கப்பட்ட யோகிகளுடைய பவித்திரமான வழியில் பிரயாணம் செய்வதற்காகத் தயாராகின்றான். தியாகிகளான குரு தேவர்களிடம் சந்நியாசத்தை (தீக்ஷையை)ப் பெறுகின்றான். தீக்ஷையை எடுத்துக் கொள்ளும் பொழுது அவன் ஐந்து மகா விரதங்களை ஏற்றுக் கொள்ள வேண்டியதாகின்றது.

(1) சிறிய அல்லது பெரிய ஜீவன் எதற்கும் ஹிம்ஸை செய்யக் கூடாது. எல்லா ஜீவன்களுடைய ரக்ஷணைக்காகவே அவர்கள் சம்சாரத்தைத் துறந்து சாது-சந்நியாசி ஆகின்றார்கள். ஏனென்றால் கிரஹஸ்தாசிரமத்தில் (இல்வாழ்க்கையில்) சூக்ஷ்ம ஜீவன்களிடத்து தயை அனுஷ்டிப்பது முடியாத காரியம். ஜைன சாது எந்தக் காரணத்தினாலும் நெருப்பைத் தொடுவதில்லை. நடுக்கத்தைத் தரும் மிகுந்த குளிரிலுங்கூட அக்னியை நாடுவதில்லை. விசிறியைக்கூட உபயோகிப்பதில்லை. இரவில் தீபம் அல்லது மின்சார விளக்குகள் ஆகியவற்றை உபயோகப்படுத்துவதில்லை.

(2) எப்பொழுதும் பொய் பேசாதிருத்தல்.

(3) எக்காலத்தும் களவாடாதிருத்தல். மிகவும் சிறிய வஸ்துவாய் இருந்தாலும் அதனுடைய சொந்தக்காரரின் உத்தரவு இல்லாமல் அதை உபயோகப்படுத்தக் கூடாது.

(4) பிரம்மசர்யம். ஜைன சாது தீக்ஷை ஏற்றுக் கொள்கிற சமயத்திலிருந்து தன்னுடைய ஆயுள் பூராவும் பிரம்மசாரியாகவே இருக்கின்ருர். பெண்களைத் தொடுவதே இல்லை. ஏதாவது ஒரு சமயம் அஜாக்கிரதையால் பெண்களுடைய வஸ்திரத்தைத் தீண்டும்படி நேரிட்டால் அதற்காகப் பிராயசித்தம் செய்ய வேண்டியது அவசியமாகின்றது. எந்த வீட்டில் பெண்கள் வசிக்கின்ருர்களோ அந்த வீட்டில் ஜைன சந்நியாசிகள் தங்குவதில்லை. இரவில் அவர்கள் தங்கியிருக்குமிடத்தில் பெண்கள் நடமாடுவது கூடாது. அவர்கள் நைஷ்டிக பிரம்மசர்யத்தை அனுசரிக்கிருர்கள்.

ஜைன சாதுக்கள் வண்டி, குதிரை, சைகிள், மோட்டார், ஆகாய விமானம் அல்லது வேறு எந்த வாகனத்தையும் உபயோகிப்பதில்லை. தேச தேசாந்திரங்களில் அவர்கள் கால்நடையாகவே ஊர் ஊராகச் செல்கின்ருர்கள். அநேக கஷ்டங்களைச் சகித்துக் கொண்டு கிராம கிராமந்தோறும், நகர நகரந்தோறும் எல்லா ஜனங்களுக்கும் ஆத்ம ஹிதமான உபதேசங்களைச் செய்கின்ருர்கள். தங்களுக்காக எதையும் வேண்டுமென்று கோராமல் ஜனங்களுடைய நன்மைக்காகவே உண்மையான வழியைக் காட்டுகின்ருர்கள்.

குடை, செருப்பு, பூட்ஸ் ஆகியவற்றை உபயோகிப்பதில்லை. அவர்களிடத்து எந்த வஸ்துவைக் குறித்

தும் வியசனம் உண்டாவதில்லே. எப்பொழுதும் ஞான தியானம், சாஸ்திர சிந்தனே, படித்தல், உபதேசித்தல் ஆகியவற்றில் அவர்களுடைய காலம் கழிகின்றது.

அவர்கள் தாங்களே உணவு தயாரிப்பதில்லே. தேன்வண்டுகளேப் போலப் பிக்ஷை கொள்வதற்காக ஒவ்வொரு வீட்டிற்கும் செல்கின்ருர்கள். தோஷமில்லாத ஆகாரத்தையும் ஜலத்தையும் ஏற்றுக் கொள்கிருர்கள். கிரஹஸ்தர்கள் தங்களுடைய நன்மையை உத்தேசித்து சாதுக்களுக்கு எல்லாவற்றையும் கொடுக்கின்ருர்கள். ஆனல், தியாகிகளாகிய சாதுக்கள் தங்களுக்கு வேண்டிய வஸ்துக்களே மட்டும் ஏற்றுக் கொள்கிருர்கள். இரவில் தங்களுடன் எந்தவிதமான உணவுப் பொருளேயும் வைத்துக் கொள்வதில்லே. தங்களுடைய தலேமயிரையும் சந்தோஷத்துடன் கையிஞலேயே நீக்கி விடுகிருர்கள். சரீரத்தின் மேலுள்ள அபிமானத்தை ஒழிப்பதற்காகவே அவர்கள் இத்தகைய கடின செய்கையை ஆனந்தத்தோடு சகித்துக் கொள்கிருர்கள்.

ஏதாவது சாப்பிட வேண்டுமானல் சூரியோதயத்திற்குப் பிறகு இரண்டு கடி (48 நிமிஷம்) நேரம் கழித்து சாப்பிடலாம். சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு உணவையும் ஜலத்தையும் கொஞ்சம்கூட உபயோகிப்பதில்லே. கடுமையான வெயிற் காலத்திலும் இரவு சமயத்தில் தாகம் ஏற்பட்டாலும் அவர்கள் ஜலம் அருந்துவதில்லே. இத்தகைய கடுமையான விரதங்களே ஜைன சாதுக்கள் சந்தோஷத்தோடு காப்பாற்றி வருகின்ருர்கள்.

ஜைன சாதுக்களின் வாழ்க்கை மிகவும் உயர்ந்தது. அவர்களுடைய வாழ்க்கை முழுவதும் உலகத்தின்

நன்மைக்காகவே இருந்து வருகிறது. ஜைன சாதுக்கள் எல்லா ஜீவன்களுடைய ரக்ஷணைக்காகவே இத்தகைய உயர்ந்த விரதங்களை ஏற்றுக் கொள்கிறார்கள். இத்தகைய மகான்களும் தியாகிகளும் சாதுக்களும் ஆகியவர்கள் நூற்றுக்கணக்காக இந்தப் பூமியின்மேல் நடந்துகொண்டே இருக்கின்றார்கள். அவர்கள் சம்சாரத்தில் மிகவும் பெரிய உபகாரத்தைச் செய்து வருகின்றார்கள். இன்று உலகில் சிறிதளவு காணப்படும் சாந்திக்கும், சுகத்திற்கும், துன்பமின்மைக்கும் காரணம் முழு பெருமை வாய்ந்த அந்தத் தியாகிகள், சாதுக்கள் தபஸ்விகள் ஆகிய புண்யாத்மாக்களுடைய உபதேசமாகும்.

## ஆத்மா

இப்பொழுதுநடைபெற்று வரும்யுகத்தில் அநேகர் தர்மத்தை அனுஷ்டிப்பதிலும் பரமாத்மனிடத்தில் பக்தி, சேவை, உபாசனை ஆகியவற்றைச் செய்வதிலும் திடமான நம்பிக்கை இல்லாதவர்களாக இருக்கின்றனர். அதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் அவர்கள் ஆத்மா உண்டென்று நம்பவில்லை. அவர்கள் ஆத்மா உண்டு என்கிற விஷயத்தில் சந்தேகங் கொள்கின்றார்கள். ஆத்ம விஷயத்தில் ஒரு முறை சந்தேகம் ஏற்பட்ட பிறகு அவர்கள் மறுபடியும் புண்யம் பாபம் பரலோகம் ஆகியவற்றை எப்படி நம்புவார்கள்? அநாத்மவாதிகளுடைய கொள்கை இது. எப்படி மற்ற வஸ்துக்கள் கண்ணால் பார்க்கப்படுகின்றனவோ அப்படி ஆத்மா பார்க்கப்படுவதில்லை. எந்த வஸ்து பார்வைக்குத் தெரியவில்லையோ அந்த வஸ்துவை எப்படி நம்புவது?

அதற்கு ஞானி புருஷர்கள் இவ்வாறு விடை கூறுகின்றார்கள். ஆத்மாவினுடைய பிரத்தியக்ஷஞானம் சர்வக்கியன் மூலம் உண்டாகிறது. ஆத்மா ஸ்வயம் சித்த வஸ்து ஆகும். அஃது அரூபியாய் இருப்பதனால் நம்முடைய பார்வைக்குத் தோன்றுவதில்லை.

காற்றை நாம் எங்கே பார்க்கிறோம்? அப்படி இருந்தும் யாராவது காற்று உண்டா இல்லையா என்று கேட்டால் காற்று உண்டு என்றே சொல்ல வேண்டியதாயிருக்கின்றது. ஏனென்றால் மரத்தினுடைய இலை அசைவதிலிருந்து காற்றினுடைய செய்கை பார்வைக்குத் தெரிகின்றது. இம்மாதிரியே யாராவது நம்முடைய தந்தை ஆயிரக்கணக்கான மூதாதையர்கள் ஆகியவர்கள் இருந்தார்களா இல்லையா என்று கேட்டால் அதற்கு "ஆம். இருந்தார்கள்" என்று விடை கிடைக்கும்.

அதற்குப்பிறகு மறுபடியும் ஒரு கேள்வி. "உன்னுடைய ஆயிரக்கணக்கான அல்லது லக்ஷக்கணக்கான தலைமுறைகள் எங்கே காணப்படுகின்றன?" அவைகளைக் குறித்து பெயரோ அடையாளமோ கிறிதும் இல்லை. தோற்றத்திற்குத் தென்படாவிட்டாலும் நாம் ஆயிரம், லக்ஷம் கணக்கான தலைமுறைகளை ஒப்புக் கொள்கிறோம். ஏனென்றால் நாம் இருக்கின்றோம். நாம் இருப்பதனால் நம்முடைய முன்னோர்கள் இருந்த விஷயம் சித்தியாகின்றது. விருக்ஷத்தினுடைய மூலம் எங்கேயாவது தெரிகின்றதா? அப்படி இருந்தும் அது இருக்கின்றதா இல்லையா என்பதற்கு விடை, மூலம் இருக்கின்றதென்றே சொல்ல வேண்டியதாகின்றது. மூலம் இல்லாமல் விருக்ஷம், இலை, பூ, பழம் ஆகியவை எவ்வாறு உற்பத்தியாகும்? ஏனென்றால் விருக்ஷ ரூப

மாயிருக்கின்ற காரியத்திற்கு ஒரு காரணம் இல்லாமல் முடியாது. அதனால் நாம் அதனுடைய காரணம் மூலம் அவசியம் வேண்டுமென்று ஒப்புக்கொள்கின்றோம.

இந்த விதமாகக் காரியத்திலிருந்து அதனுடைய காரணத்தை நாம் அறிந்து கொள்கிறோம். இந்த விதமாக ஆத்மனுடைய காரியம் கூட உயிருடன் இருக்கும் மனிதர்களிடத்தில் காணப்படுகின்றது. உயிருள்ள மனிதர்கள் எவ்விதம் அசைந்து செல்கின்றார்கள்! வேலை செய்கின்றார்கள். சேஷ்டை செய்கின்றார்கள் இறந்த கால, எதிர்கால சம்பந்தமான விசாரணைகள் செய்கின்றார்கள். கற்பனை செய்கின்றார்கள். இந்தச் செய்கைகளெல்லாம் செத்துக் கிடைக்கும் ஒருவனிடத்தில் உண்டாவதில்லை. ஒரு நிமிஷத்திற்குமுன் ஜீவித்திருந்த மனிதனிடத்தில் அசைதல் முதலாகிய எல்லாச் செய்கைகளும் இருந்தன. அவன் இறந்த பிறகு ஒரு க்ஷணத்தில் அந்த மனித சரீரத்தில் எதுவும் காணப்படுவதில்லை. இந்தப் பிரத்தியட்சமான உதாரணத்திலிருந்து ஜீவிக்கின்ற மனிதனிடத்தில் ஆத்மாவின் காரியம் உண்டென்றும், இறந்தவனிடத்தில் அது கொஞ்சம்கூட இல்லையென்றும் தெளிவாகின்றன. இம்மாதிரி ஆத்மாவின் காரியம் நம்மிடத்தில் பிரத்தியட்சமாகக் காணப்படுகின்றது. இந்தத் திருஷ்டாந்தத்திலிருந்து நாம் ஆத்மாவை நன்றாக அறிந்து கொள்ளக் கூடும்.

சரீரம் ஆத்மாவினுடைய வீடு. வீட்டில் வசிக்கின்றவன் வீட்டினின்றும் வேறாகின்றான். வீடு அல்லது அரண்மனை விழுந்து விட்டால் அல்லது வாடகைக்கு எடுத்துக் கொண்ட வீட்டின் கால அளவு பூரணமானால் அந்த வீட்டில் இருப்பவன் அந்த

வீட்டைக் காலி செய்து விட்டு வேறு இடத்தில் வசிக்கும்படி நேரிடுகிறது. அம்மாதிரியே இந்தச் சரீரத்தில் ஆத்மா இருக்க வேண்டியதின் கால எல்லை முடியும் பொழுது ஆத்மா தன்னுடைய கருமத்தின்படி வேறு இடத்தில் வசிப்பதற்குத்தக்க படி ஆயுஷ்ய கர்மத்தின் படி செல்கின்றது. இரண்டாவது ஜன்மம் எடுக்கும் பொழுது இரண்டாவது சரீரத்தை அடைகிறது. அந்த ஜன்மமும் முடிந்த பிறகு மூன்றுவது ஜன்மத்திற்கு ஆத்மா செல்கின்றது. அங்கே மூன்றுவது ஜன்மத்தை எடுக்கின்றது. இம்மாதிரியாக அனுதி காலத்திலிருந்து கர்மத்திற்குத் தக்கபடி ஜனன மரண பரம்பரை நடந்து கொண்டே வருகின்றது.

எப்படி உறையிலிருந்து வாள் வேருகின்றதோ அந்த மாதிரியே தேகத்திலிருந்து ஆத்மா வேருகின்றது. பாலில் நெய் இருந்தபோதிலும் நெய் காணப்படுவதில்லை. ஆனுல், பிரயோகத்தினுல் தயாரிக்கப்பட்ட நெய் தோற்றத்திற்குப் புலனுகின்றது. அம்மாதிரியே ஆத்மா கேவலக் ஞானம் (கடையிலா அறிவு) கேவல தரிசனம் (கடையிலா காட்சி) ஆகியவற்றின் மூலமாகத் தெரிய வருகின்றது. ஞானரூபி காரியம் ஆத்மாவினுடையது. ஜட பதார்த்தத்தில் அறிவு என்பதே இல்லை. சரீரம் அனுபவிக்கக் கூடியது. அதை அனுபவிப்பதற்கு யாராவது அவசியம் வேண்டும். அஃது ஆத்மா தான். போக்ய வஸ்துவிலிருந்து (போக்தா) அதனை அனுபவிக்கின்றவன் வேருகின்ருன்.

நான் யார்? இந்தக் கேள்விகூட ஆத்மா உண்டென்று நிரூபிக்கின்றது. ஸ்தம்பம், துணி, பாடம் ஆகிய எந்த ஜட வஸ்துவிலும் அசைவு தோன்றவில்லை. எப்பொழுது ஆத்மா சரீரத்தில் இருக்

கின்றதோ அப்பொழுது அது, "நான் இருக்கின்றேன், நான் சுகி அல்லது துக்கியாய் இருக்கின்றேன்," என்று கூறுகின்றது. ஏனென்ருல் ஞானமாகிய குணம் ஆத்மாவினுடையதே. சடப்பொருளினுடையதன்று.

ஆனால் எப்பொழுது ஆத்மா சரீரத்தைவிட்டுப் போகின்றதோ அப்பொழுது அந்த சரீரத்திற்கு, "நான் இருக்கின்றேன்" என்கிற அறிவு தோன்றுகிறதேயில்லை. ஆகையால் சரீரம் வேருன பொருள். ஆத்மாவும் அதனிலிருந்தும் வேருன பொருளாக இருக்கிறது.

எப்படி ஜன்னலின்மேல் நிற்கின்ற ஒரு மனிதன் அந்த ஜன்னலினின்றும் வேருகின்ருனே அப்படியே சரீரமும் சரீரத்திலிருந்து கொண்டு எல்லா வஸ்துக்களையும் பார்க்கின்ற ஆத்மாவும் பரஸ்பரம் வேருனவைகள். கண் பார்ப்பதில்லை. ஆனல் ஆத்மா பார்க்கின்றது. இறந்து கிடக்கும் மனிதனிடத்திலும் கூட உயிருடன் இருக்கின்ற மனிதனுக்குச் சமானமாகவே பெரிய பெரிய கண்கள் இருக்கின்றன. அப்படி இருந்தும் இறந்தவன் ஏன் பார்க்க முடியவில்லை? இந்தக் கண்கூடான எடுத்துக் காட்டை நாம் அடிக்கடி நினைக்கும்பொழுது 'கண் பார்ப்பதில்லை' "உயிரோடு இருந்த மனிதனிடத்தில் சரீரம் முழுவதும் ஆத்மா வியாபித்திருந்தது. அது பார்த்தது" என்று சொல்ல வேண்டியதாயிருக்கின்றது. கண் சாதனப் பொருள். எப்படி ஒரு மனிதன் வீட்டிலிருந்து கொண்டு ஜன்னல் அல்லது வாயில் வழியாக வெளியே பார்க்கிருனே அப்படியே மனிதனுக்குள்ளிருக்கும் ஆத்மா கண்வழியாகப் பார்க்கின்றது. இந்தத் திருஷ்டாந்தங்களினல் கண் முதலாகிய இந்திரியங்கள் வேருன வஸ்துக்கள் என்றும் ஆத்மா அவை

களினின்றும் முற்றிலும் பின்ன வஸ்து என்றும் நாம் அறிகின்றோம். எவ்வாறு அரணீ மரத்தில் அக்னியும், பாலில் நெய்யும் பார்வைக்குக் காணப்படா விட்டாலும், முற்றிலும் அவைகளில் வியாபித்திருக்கின்றனவோ அவ்வாறே ஆத்மாவும் சரீரத்தில் வியாப்தமாய் இருக்கின்றது. ஆத்மா தன்னுடைய சொரூபத்தை அடையும்பொழுது அது தர்மத்தை அனுஷ்டிப்பதில் ஈடுபடுகின்றது. கர்மங்களை உடைக்கின்றது. அப்பொழுது பிறப்பும் இறப்பும் இல்லாமல் போகின்றன. அந்த அமர ஆத்மா மோக்ஷ ஸ்தானத்தில் சாசுவதமாய் என்றும் நிலைபெற்று அகண்டமான அநந்த சுகியாகின்றது.

இவ்வாறு அநேக பிரமாணங்களினால் ஆத்மா உண்டென்று சித்தமாகின்றது. ஆத்மா தனக்குத்தானே அறியும் தன்மையுடையதால் சித்த வஸ்து ஆகும். இந்த உலகத்தை விட்டுவிட்டுப் பரலோகத்திற்குப் போகக்கூடியது. அது பரலோகத்திலிருந்து வந்து இந்த சரீரத்திலிருக்கிறது. ஆயுஷ்ய கர்மம் முடிந்தவுடன் இந்தச் சரீரத்தைவிட்டு வேறு சரீரத்திற்குப் போகக்கூடியது. இந்த விஷயம் நிச்சயமானது. ஆத்மா என்று முள்ளதாய் பேதிக்கக்கூடாததாய் நாசமற்றதாய் இருக்கின்றது. அப்படி இருந்தும் அது கருமங்களால் கட்டுப்பட்டு ஜனன மரணத்திற்குள்ளாகின்றது. சம்சாரத்தில் சுழன்று சுழன்று இருக்கும்படி நேரிடுகின்றது. துக்கத்தை அனுபவிக்கின்றது. கடைசியாக கர்மங்கள் நாசமடைந்த பிறகு அது தன் சொரூபத்தை அடைந்து பூரணமாகின்றது. பரமாத்ம சொரூபத்தை அடைகின்றது. அவ்வாறு பூரணமடைந்த ஆத்மாவைப் பரமாத்மா என்று கூறுகின்றார்கள்.

# கர்மம்

இந்த உலகம் எவ்வளவு அதிகமான விசித்திர வஸ்துக்களால் நிறைந்து காணப்படுகின்றது. இந்த எல்லா விசித்திரங்களுக்கும் மூல காரணம் கர்ம மாகும். கர்மம் அவ்வாறான வஸ்துவாக இல்லாவிடின் பிரத்தியட்சமாகத் தோன்றுகின்ற விசித்திரங்கள் உண்டாகமாட்டா. ஒருவன் அரசன், ஒருவன் ஏழை, ஒருவன் ரோகி, ஒருவன் ரோகமற்றவன், ஒருவன் கறுப்பன், ஒருவன் சிவப்பன், ஒருவன், பருத்தவன் ஒருவன் ஒல்லியன், ஒருவன் எஜமானன், ஒருவன் வேலைக்காரன், ஒருவன் முட்டாள், ஒருவன் புத்தி மான், கீழானவன், மேலானவன், கையில்லாதவன், கால் இல்லாதவன், குருடன், செவிடன், அழகுள்ள வன், அழகற்றவன் ஆகிய இந்த விசித்திரங்க ளெல்லாம் எப்படி உண்டாகின்றன? இந்த விசித்தி ரங்களையெல்லாம் பார்த்த பிறகு இவைகளுக்குப் பின்னால், கருமம் என்று சொல்லப்படும் ஒரு மகாசக்தி வேலை செய்கின்றது என்பதை நாம் எளிதில் அறியக் கூடும். இந்த மகா சக்தி, உலகத்தில் எல்லா விசித் திரங்களும் தோன்றும்படிச் செய்கின்றது

கர்மத்தின் அணுக்கள் உலகம் முழுமையும் நிறைந்து கிடக்கின்றன. அவைகள் பார்வைக்குத் தோன்றா விடிலும் அவைகளின் காரியத்தால் அவை களை அறிகின்றோம்.

ஒரு சமயம் ஜனங்கள், "ஹிட்லர் எந்தச் சமயத் திலும் தோற்கடிக்கப்பட மாட்டான்" என்று சொல்லிக் கொண்டு இருந்தார்கள். அவனுடைய வெற்றி சம்பந்தமான முரசே நாலா பக்கங்களி

லும் முழங்கிக் கொண்டிருந்தது. அப்படி இரு தும் இன்று அவனைப் பற்றிய அடையாளம் ஒன்றும் இல்லை. எவனுடைய பேச்சை ஆகாய வாணி (Broadcast) மூலம் கேட்பதற்காக ஆயிரம் லக்ஷம் கணக்கான மக்கள் ஓடினார்களோ, அவனுடைய சப்தம் இன்று இல்லாமலேயே போய்விட்டது. பெரிய பெரிய அரசருடைய சிம்மாசனங்கள் எல் லாம், சாய்ந்து பொடியாகி அவர்கள் தங்கள் முகத்தைக் காட்டாமல் எங்கும் திரிந்து மண்ணோடு மண் ணானார்கள். இவைகள் எல்லாவற்றிற்கும் முக்கிய காரணம் என்ன ? அவர்களுடைய கருமந்தான்.

ஒரே தாயின் கர்ப்பத்தில் இரட்டைக் குழந் தைகள் பிறக்கின்றார்கள். அவற்றுள் ஒன்று புத்தி யுள்ளதாயும் மற்றொன்று புத்தியற்றதாயும் இருக் கின்றது. ஒன்று தனிகனாகவும் மற்றொன்று ஏழையாகவும் ஆகின்றது. ஒன்று கறுப்பாகவும் மற்றொன்று சிவப்பாகவும் பிறக்கினறது. இதற் குக் காரணம் என்ன? கர்ப்பத்தில் இவைகள் எந்தக் கருமங்களைச் செய்யாமல் இருந்திருந்தாலும் இவ்வளவு அதிக விசித்திரத்திற்கு காரணம் என்ன? ஒரே சமயத்தில் பிறந்த போதிலும் அவைகள் பூர்வ ஜன்மங்களில் செய்த கருமங்களின் பரிணாம ரூபத் தினால் அதிசயமான விசித்திரத் தன்மை காணப்படு வதை நாம் அறிகின்றோம். ஆத்மா வேறு இடத் திலிருந்து வந்திருக்கும்போழுது அது தன்னுடைய கர்மத்தின்படி மற்றோரிடத்திற்கும் போகும் என்பது நிச்சயமான விஷயம்.

ஆத்மா மரணமில்லாதது; சேதிக்க முடியாதது; நாசமற்றது. ஒரு மனிதன் எம்மாதிரி தன்னுடைய

பழைய வஸ்திரத்தைத் களைந்து எரிந்துவிட்டுப் புதிய வஸ்திரத்தைத் தரித்துக் கொள்கிறுனே அம் மாதிரியே இந்த ஆத்மா ஒரு சரீரத்தை விட்டு விட்டு மற்றெரு சரீரத்தை ஏற்றுக்கொள்கிறது. இந்த ஆத்மா அந்தச் சரீரத்தில் வசிக்கின்றது. அது தன் கர்மத்திற்குத் தக்கவாறு பலவிதமான பிறவிகளில் சுழல்கின்றது. அநேகவிதமான கஷ்டங் களையும் வேதனைகளையும் அனுபவிக்கின்றது. மனி தர்கள் இவ்விதமாக தேவர்களுக்கும் துர்லபமான மனுஷ்ய ஜென்மத்தை அடைந்து அநேக விதமான தீய கருமங்களைச் செய்கின்ருர்கள். ஹிம்ஸை, பொய், திருடு, துராசாரம், அநீதி, தோஷம், பொருமை, நிந்தை, தீய கதை ஆகியவற்ருல் கர்மத்தைச் சேர்க் கின்ருர்கள். அந்தக் கருமம் பாலும் நீரும் போல ஆத்மாவோடு ஒன்ருகக் கலக்கின்றது. பரிணும சொரூபத்தையுடைய ஆத்மா அநேக ஜன்ம ஜன் மாந்திரங்களில் சகிக்க முடியாத துக்கங்களை அனு பவிக்கும்படி நேரிடுகின்றது.

மனிதன் தற்காலத்தைப் பற்றி விசாரணை செய் கின்ருன். ஆனல் எதிர்காலத்தைப் பற்றி யோசிக்க வில்லை. குறுகிய நோக்கமுடையவனுக இருக்கின்ருன். குறுகிய வாழ்க்கையில் பெருமை கவுரவம் ஆகியவற்றிற் காகவும், தான் பெரிய மனிதன் என்று அழைக்கப்படு வதற்காகவும், அவன் தர்ம கர்மத்தோடு ஆத்மாவை யும் மறந்துவிடுகின்ருன். இந்த விஷயம் அவனுக்குத் தெரிவதில்லை. பரிணும ஸ்வரூபியான அந்த ஆத்மா தன் கர்மங்களின் தீய பலன்களை அனுபவிக்க நேரிடுகின்றது. எதிர்காலம் அனந்தமானது. ஒரு சிறிய வாழ்க்கையில் அல்ப சுகத்திற்காக ஒரு பிராணி

எண்ணிறந்த காலம் துக்கத்தின் பரம்பரையான சுமையை தன் மேல் ஏற்றுக் கொள்கிறது. ஆஹா! ஆஹா! என்ன பெரிய மூடத்தன்மை!

மனிதர்கள் தங்கள் புத்திக்குத் தோன்றியவாறே சென்று வேதனைப்பட்டு இறக்கின்றார்கள். கர்வத்தை உடையவர்களாய் தங்கள் மனதில் தோன்றிய வற்றை யெல்லாம் பேசுகின்றார்கள். இந்த வாழ்க்கை யில் ஒவ்வொரு நிமிஷமும் யோசனை செய்கின்றார்கள். ஆனால், இந்த வாழ்க்கை "ஓம் புடு ஸ்வாஹா" ஆன பிறகு என்ன நேரிடும்? சரீரத்திலிருந்து ஆத்மா சென்ற பிறகு என்ன நிலைமை ஏற்படும்? எங்கே போவது? இவைப் பற்றி ஒரு சிறிதும் விசாரிப்பதே இல்லை. அரண்மனை, ஐசுவரியம், அதிகாரம் ஆகிய எல்லாம் கேவலம் இந்த வாழ்க்கை பரியந்தம் தான் நிற்கின்றன. சாப்பிடுவதற்கு யோக்கியமற்ற மாமிசம், கள் ஆகியவற்றினால் தன்னுடைய சரீரத்தைப் போஷித்து பலவானாகச் செய்த பிறகும்கூட அந்தச் சரீரம் முடிவில் ஒரு சமயத்தில் சாம்பலாக போகக் கூடியது என்பதை அவன் மறந்து விடுகிறான். அஞ்ஞானி ஆத்மா போகத்தில் ஈடுபட்டு விலங்கைப் போன்று தன் வாழ்க்கையை வீணாக்குகின்றது. இந்த விலையற்ற மனித சரீரத்தைப் பயனற்றதாகச் செய்கின்றது.

எந்த இடத்தில் இரத்தினங்களை ஒன்று சேர்க்க வேண்டுமோ அந்த இடத்தில் கல் துண்டுகளை ஒன்று சேர்த்து வைக்கின்றான். எவ்வளவு பெரிய அஞ்ஞானம்! மனிதனுடைய வஸ்திரம் சிறிது அழுக்கடைந்தாலும் சிறிது துர்நாற்றமடைந்தாலும் அஃது அவனால் விரும்பப்படவில்லை. அம்மாதிரியே குப்பை

கூளங்களால் நிறைந்து கிடக்கும் வீடும் அவனுக்கு இஷ்டமானதில்லை. அப்படியிருக்க தன்னுடைய ஆத்மா வின் தோஷம் தன்னால் எப்படி விரும்பப்படுகிறது?

மனிதன் தன்னுடைய வீட்டை அடிக்கடி துடைப்பத்தினால் விளக்கி சுத்தம் செய்கின்றான். தன் னுடைய சரீரத்தில் ஏற்பட்டிருக்கும் அழுக்கைப் போக்குவதற்காக வெந்நீர், சோப்பு ஆகியவற்றால் நன்றாகத் தேய்த்து ஸ்நானம் செய்கிறான். தன் சரீ ரத்தைச் சௌக்கியமாக வைத்துக் கொள்கிறான். ஒவ்வொரு நாளும் வஸ்திரத்தைத் தோய்த்து விட்டு வேறு வஸ்திரத்தை அணிகின்றான். ஆனால் தனக்கு மிகமிக சமீபத்தில் உள்ள ஆத்மா மலின மடைந்த பொழுது அதை சுத்தப்படுத்துவதற்காக முயற்சி செய்வதேயில்லை. ஆத்மாவிற்கு இது எல்லாவற்றிலும் பெரிய அஞ்ஞானத் தன்மை ஆகும். சரீரம், தனம், பொருள், ஜமீன், சொந்த பரிவாரம் ஆகிய எல்லாம் க்ஷணத்தில் நாசமடைகின்றன. அவைகளிடத்து இருக்கும், மோகத்தினால் மனிதன் தன்னுடைய வாழ்க்கையை வீணாக்கி நித்தியமாய் உள்ள ஆத் மாவை மறந்துவிடுகிறான்.

ஆத்மா இருந்தால் எல்லாம் இருக்கும். ஒரு வனிடத்தில் எதுவரையில் ஆத்மா இருக்கின்றதோ அதுவரையில் எல்லோரும் அவனை மதிக்கின்றார் கள். உபசார வர்த்தை பேசுகின்றார்கள். வர வேற்கிறார்கள். ஆனால், பிணத்திற்கு என்ன மதிப்பு இருக்கின்றது. நமக்குச் சத்காரம் செய்தவர் கள், நாம் இறந்த பிறகு நம்முடைய சரீரத்தை அவர்கள் கையாலேயே தகித்துச் சாம்பலாக்குகின்றார் கள்.

ஆத்மா இருக்கும் பொழுது தோட்டம், துரவு, பங்களா, ஐசுவரியம் ஆகிய எல்லா வஸ்துக்களும் உபயோகப்படுகின்றன. ஆனால், ஆத்மா சரீரத்தினின்று விலகி பரலோகத்திற்குப்போகும் பொழுது பெரிய பெரிய அரண்மனை, ஐசுவரியம், தன ராசிகள், பந்துக்கள், பிரியமுள்ள மனைவி, அன்புள்ள கணவன், ஆகியவைகளெல்லாம் இங்கேயே நின்று விடுகின்றன. ஆத்மா மட்டும் யாருக்கும் தெரியாமல் கிளம்பிப் போய்விடுகின்றது. வேறு ஜன்மத்தில் முன்னே செய்த கர்மத்தின் பலனை அனுபவிக்கும்படி ஆகின்றது.

கள் ஜடப் பொருளாயிருந்த போதிலும் ஆத்மாவிற்கு மயக்கத்தைத் தருகின்றது. அப்படியே கருமமும் ஜடமாயிருந்த போதிலும் ஆத்மாவின் மேல் தன்னுடையப் பிரபாவத்தை செலுத்திப் பலனைத் தருகின்றது. முன்னமே செய்யப்பட்டுள்ள கர்மங்களினின்று விடுபட வேண்டுமானால், நிலையுள்ள சாந்தியை அடைய வேண்டுமானால், பூரண சுகி ஆகவேண்டுமானால், எல்லாக் காலத்தும் அகண்ட ஆனந்தத்தில் இருக்க வேண்டுமானால், நாம் ஞானி புருஷர்களால் காட்டப் பெற்ற மார்க்கத்தில் செல்ல வேண்டும். உண்மையான ஞானத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். உண்மையான கவுரவத்தில் நிற்க வேண்டும். உண்மையான கிரியைகளைச் செய்ய வேண்டும். எல்லா ஜீவன்களிடத்தும் சிநேகத் தன்மையோடு, அஹிம்ஸையோடு கூடிய தொழிலைச் செய்து நல்ல ஆசாரம், நியாயம், நீதி, சத்தியம் ஆகியவற்றை அனுஷ்டிக்க வேண்டும். தவக் கிரியைகளைச் செய்து கொண்டேயிருத்தல் வேண்டும். இந்திரியங்களுக்கு

அடிமையாகாமல் அவற்றை அடக்க வேண்டும். ஆத்மாவை அறிந்து ஆத்ம விளக்கத்திற்காக எப்பொழுதும் முயற்சி செய்தல் வேண்டும். அதனுல் ஆத்மா கிரமமாகக் கருமங்களினின்று விடுபடுகின்றது. முடிவில் கருமங்களினின்றும் முழுவதும் விடுதலை அடைந்து மோக்ஷத்திற்குச் செல்கின்றது. அங்கே எப்பொழுதும் நிலையுள்ள சகத்தை அனுபவிக்கின்றது.

எப்படிச் சுரங்கத்திலுள்ள பொன்னுனது அனுதி காலத்திலிருந்து மண்ணேடு சம்பந்தப்பட்டிருக்கிறதோ அப்படியே ஆத்மா கூட அனுதி காலத்திலிருந்து கர்மத்தினுல் பிணிக்கப்பட்டிருக்கிறது.

எவ்விதமாகப் பொன் 'சுரங்கத்தினின்றும் வெளியே எடுக்கப்பட்டு உருக்குதல் முதலாகிய பிரயோகங்களால் சுத்தமாகவும் நிர்மலமாகவும் செய்யப்படுகின்றதோ, அவ்விதமாகவே ஆத்மாவும் தவம், அடக்கம், தயை, தானம், முதலாகிய சாதனங்களால் கருமத்தினின்றும் விடுபட்டு முழுதும் சுத்தமாகின்றது. எந்த ஆத்மா கருமத்தினின்றும் விடுபடுகின்றதோ அந்த ஆத்மா பரமாத்ம நிலையை அடைகின்றது.

ஜீவாத்மாக்களின் எண்ணிக்கை அனந்தா அனந்தமானது. எல்லா ஆத்மாக்களும் தனித்தனியானவை. எல்லோருடைய ஆத்மாக்களும் வேறு வேருனவை. எல்லோருடைய ஆத்மாவும் ஒரே ஆத்மாவாய் இருந்தால் ஒருவனுடைய துக்கத்தினுல் எல்லாரும் துக்கமுடைவர்களாகக் காணப்பட வேண்டும். ஆனுல், நாம் பார்ப்பது இதற்கு விபரீதமாயிருக்கின்றது. எவனெருவன் சர்க்கரை சாப்பிடுகின்ருனே அவனுக்கு மட்டுமே சர்க்கரை தித்திக்கின்றது. ஒருவன் இறக்

கும்பொழுது அவனேடு எல்லோரும் இறந்துபோவ தில்லை. இதனுல் நாம் அறிந்துகொள்வதாவது எல்லா ஆத்மாக்களும் சுபாவத்தினுல் சமமாக இருந்த போதிலும் தனிப்பட்ட தன்மையில் அவைகளெல்லாம் வேறு வேருனவை என்பதாம்.

எந்த எந்த ஆத்மாக்கள் கர்மங்களினின்று விடுபடுகின்றனவோ அவைகளெல்லாம் பரமாத்மாக்கள் ஆகின்றன.

சுத்தமடைந்த ஆத்மாவிற்கு மறுபடியும் கர்மத்தின் பூச்சு ஏற்படுவதில்லை. அதனுல் அது மறுபடியும் அவதாரம் செய்வதோ அல்லது ஜென்மம் எடுப்பதோ இல்லை. விதை எரிக்கப்பட்ட பிறகு எப்படி முளை தோன்றுவதில்லையோ, அப்படியே கர்ம ரூபமான விதை முற்றிலும் பஸ்மமாக்கப்பட்ட பிறகு பிறப்பு இறப்பாகிற அங்குரம் முளைப்பதில்லை. இதனுடைய கருத்து என்னவென்ருல், அது மறுபடியும் ஜன்மம் அல்லது அவதாரம் எடுப்பதில்லை. அந்த ஆத்மா திரும்பவும் பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை. பரமாத்மாவான ஆத்மா இந்தச் சரீரத்தை விட்டு ஒரே சமயத்தில் ஏழு ரஜ்ஜு உயரம் மேலே செல்கின்றது. அங்கே அனந்த சித்தாத்மாக்கள் இருக்கின்ருர்கள். அங்கே அந்த ஆத்மாக்கள் ஜன்மம் எடுப்பதில்லை. பிறப்பதும் இல்லை, இறப்பதும இல்லை. அவர்களிடத்து எப்பொழுதும் பிணி உண்டாவதில்லை, சோகமும் ஏற்படுவதில்லை, யாரிடத்தும் பயமுமில்லை, எவ்விதத்தினுலும் சிறிதளவும் வேதனை உண்டாவதில்லை. அங்கே எல்லாரும் எக்காலத்திலும் முடிவற்ற ஆனந்தக் கடலில் அமைந்திருக்கின்ருர்கள்.

எந்த ஆத்மா சுத்தமாகி மாசற்றதாகின்றதோ அந்த ஆத்மா பரமாத்மா என்று அறியப்படுகின்றது. பரமாத்மா என்கின்ற சப்தம் இவ்விஷயத்தையே நிரூபிக்கின்றது. இதனுல் பரமாத்மா, பூரண ஞானி ஆகமுடியாவிட்டால் சாதுக்கள் வீட்டை விட்டுக் கடுமையான தவத்தைச் செய்வதற்கு அவசியமே இல்லாமல் போகின்றது. சாதுக்கள், முனிகள், முக்தியை அடைவதற்காகத் தனித்தனியாக உத்கிருஷ்டமான கிரியைகளேயும் தவச்சரியைகளேயும் செய்கின்ருர்கள். எந்தப் பிரயோஜனமும் இல்லாமல் ஒரு மூட மனிதன்கூட எந்த வேலேயையும் செய்யமாட்டான். இதனுல் புத்திமான்களும் தபஸ்விகளுமான சத்புருஷர்கள் மோக்ஷத்தை அடைவதற்காக எந்தத் தார்மிக அனுஷ்டானங்களேச் செய்கின்ருர்களோ அவைகள் யதார்த்தமானவை.

“பரமஸ்சா ஸௌ ஆத்மாச பரமாத்மா” :— இங்கே பரம என்கின்ற சொல் ஆத்மாவிற்கு விசேஷணமாகும். எந்தத் தியாகிகள் முனிகளுடைய ஒழுக்கமும் விசாரணேயும் உத்தமமானவைகளாக இருக்கின்றனவோ அந்த ஆத்மாக்கள் மகாத்மாவென்று அறியப்படுகின்ருர்கள்.

எவனுடைய ஆசாரம் கீழானதோ, எவன் கெட்ட செய்கைகளேச் செய்கின்ருனே, எவன் தயையில்லாதவனுய் பாபியாகின்ருனே, அவனுடைய ஆத்மா அதம ஆத்மாக்களில் எண்ணப்படுகின்றது. பரமாத்மா, அதாவது வீதராகன், சர்வக்கியன், சர்வதரிசி, சர்வசக்திமான், பூரணசுகி, அகண்ட ஆனந்தத்தை அனுபவிக்கின்றவன், அனந்த குணி, சர்வோபரி, சுத்த ஆத்மா என்னும் பெயர்களால் அறியப்படுகின்ருன்.

# ஈஸ்வர வழிபாடு

ஜைன தர்சனம் பூரண ஆஸ்திக தர்சனமாகும். ஜைனர்கள் எவ்விதம் ஈஸ்வர வழிபாடு, சேவை, பக்தி ஆகியவற்றைச் செய்கின்ருர்களோ அவ்வித உபாசனை ஒரு வேளை ஒரு சிலரே செய்கின்ருர்கள். அவர்கள் பரமாத்மனிடத்தில் உள்ள பக்தியினுல் தங்கள் உடல், மனம், தனம் ஆகியவற்றை ஈடுபடுத்துகின்ருர்கள்.

இந்த விஷயம் ஜைன ஆலயங்களைப் பார்ப்பதினுலேயே சகஜமாக ஞாபகத்திற்கு வரும்.

பரமாத்மாவிற்குச் சேவை செய்தால் நம்முடைய ஆத்மா பரமாத்மாவாகின்றது. வண்டைத் தியானம் செய்து கொண்டிருக்கிற ஒரு புழு எப்படி வண்டாக மாறுகின்றதோ, அப்படியே பரமாத்ம தியானத்தினுல் ஆத்மா பரமாத்மாவாகிறது. ஆத்மா ஸ்படிக ரத்தினத்தைப் போல மாசற்றது. எவ்வாறு ஸ்படிக ரத்தினத்தின் சமீபத்தில் வைக்கப்பட்ட ஒரு வஸ்துவின் நிறத்தை அந்த ஸ்படிக ரத்தினம் ப்ரதிபிம்பித்து அந்த நிறமுடையதாகவே காணப்படுகின்றதோ அவ்வாறே ஆத்மாவும் எந்த எந்த வஸ்வோடு சம்பந்தப்படுகிறதோ அந்த அந்த வஸ்துவாக காணப்படுகின்றது. விருப்பு, வெறுப்பு, மோகம் ஆகியவற்ருேடு சம்பந்தப்பட்ட ஆத்மா விருப்புள்ளதாய், வெறுப்புள்ளதாய் மோகமுடையதாய் பரிணமிக்கின்றது. நல்ல கூட்டுறவு ஏற்படும் பொழுது நல்ல எண்ணங்கள் உற்பத்தியாகின்றன. இது காரணத்தினுல் சம்சாரி ஜீவன்களுக்கு நல்ல நிமித்தங்களும் நல்ல ஆலம்பனங்களும் (பற்றுக் கோடுகள்) முதன்முதலில் அதிக விரைவில் வேண்டி

யனவாய் இருக்கின்றன. இதற்காக மிகவும் உத்கிருஷ்டமானதும் சுத்தமானதும் ஆகிய நிமித்தம் பரமாத்மாவின் பெருமை நிறைந்ததும், சாந்தமுகமான முத்திரையையுடையதும், வீதராக தன்மையைப் பிரத்தியட்சமாக விளக்குவதும் மனதைக் கவர்ச்சி செய்யக்கூடியதுமான மனோகரமான மூர்த்திகள் (பிம்பங்கள்) ஆகும். இந்த வீதராக பரமாத்மனுடைய மூர்த்தியைத் தரிசித்துப் பூஜித்து அதற்குப் பக்தியுடன் சேவை செய்தால் ஆத்மா வீதராகத் தன்மையை அனுபவிக்கின்றது. பரமாத்மாவிற்கு எந்த வஸ்துவும் அவசியமில்லை. ஆனால், பக்த ஜனங்கள் சம்சாரத்தின் மோகம், மாயை ஆகியவற்றினின்றும் விடுபடுவதற்கு உடல், மனம், தனம் ஆகியவற்றை அந்தப் பரமாத்மனின் பாத கமலங்களில் சமர்ப்பிக்கின்றனர்கள். இவ்வாறு எண்ணத்தில் நினைந்து கோருகின்றனர்கள். "ஏ! பிரபுவே, இந்த எல்லா வஸ்துக்களின்மேலுள்ள மோகத்தினால் ஆத்மா ஜென்ம ஜென்மாந்திரங்களிலிருந்து பைத்தியமாயிருக்கின்றது. அப்படி இருந்தும் எந்த ஜென்மத்திலும் அதற்குத் திருப்தி உண்டாகவே இல்லை. இந்தக் கேவலமான ஜட வஸ்துக்களின் மேலுள்ள மூர்ச்சை, மோகம், மாயை ஆகியவற்றை விட்டு விட்டு நான் உன்னைப் போலவே வீதராக தன்மையை எப்பொழுது அடைவேன்"

வீதராகனைத்யானிப்பதனால் ஆத்மா வீதராகனாகின்றது. ஏனென்றால் ஒவ்வொரு ஆத்மனிடத்திலும் வீதராக குணம் கர்மத்தினால் மறைக்கப்பட்டு இருக்கின்றது. உண்மையில் ஆத்மாவினுடைய சொரூபம் ஒன்றேயாகும். இதனாலேயே நாம் "சோஹம் சோஹம்" என்று ஜபம் செய்கிறோம்.

ஏ! பிரபு! உன்னுடைய சொரூபத்திற்கும் என்னுடைய சொரூபத்திற்கும் சிறிதளவும் வித்தியாசம் இல்லை. நான்கூடப் பரமாத்ம சொரூபியாகும். ஆனால் நீ கர்மங்களினின்று விடுபட்டவனாய் பரமாத்ம பதவியை அடைந்திருக்கின்றாய். நான் கருமவசப்பட்டு இந்தச் சம்சாரத்தில் உழன்று கொண்டிருக்கின்றேன்.

இம்மாதிரி பலவித எண்ணங்களோடு பரமாத்மனிடத்தில் பக்தி செய்தால் ஆத்மா சுலபமாகச் சுகத்தைச் சாதிக்கின்றது. எத்தன்மையாக ஜினேஸ்வர தேவனுடைய மூர்த்தி ஆத்மாவை வசீகரிக்க உத்தம பற்றுக்கோடாக இருக்கின்றதோ அத்தன்மையாகவே தர்ம புஸ்தகங்களும் தியாகி குருதேவர் ஆகியவர்களுங்கூடச் சிரேஷ்டமான பற்றுக் கோடுகளாக விளங்குகின்றார்கள். இந்தக் காரணத்தினால் அவர்களுடைய சகவாசத்தில் இருக்கின்றவர்களுடைய ஆத்மா மாறுதலடைகின்றது. சன்மார்க்கத்தில் செல்கின்றது. தெளிவை அடைகின்றது. அது கர்மங்களை நாசம் செய்வதில் சமர்த்தனாகின்றது.

## ஈஸ்வர கர்த்தா

இந்த உலகத்திற்குக் கர்த்தா, அதாவது இந்த உலகத்தைச் சிருஷ்டித்தவர் ஈஸ்வரன் என்று அநேகர் நம்புகின்றார்கள். ஏனெனில் சாமான்யமானவர்களால் இந்த உலகத்தை உண்டு பண்ணுவது சாத்தியமான காரியம் அன்று. ஆனால் அவர்களுடைய கொள்கையான இது மயக்கத்தினால் ஆகும். ஈஸ்வரன் உலகத்தின் கர்த்தா என்று நம்புவதில் அநேகக் குற்றங்கள் இருக்கின்றன.

ஈஸ்வரன் எதற்காக உலகத்தைச் சிருஷ்டித்தார்? உலகம் இல்லாத பொழுது அவர் எங்கே இருந்தார்? என்ன? தனியாக இருப்பது ஈஸ்வரனுக்கு நன்ருக இல்லையா? இதனுல் லீலை செய்வதற்காக அவர் உலகத்தை உண்டு பண்ணினுரா? இந்த கொள்கையை ஏற்றுக் கொண்டால் ஈஸ்வரனைக் குழந்தைகளுக்குக் சமானமாக நினைக்க வேண்டும்.

இந்த உலகத்தை ஈஸ்வரன் சிருஷ்டித்தால் அந்த ஈஸ்வரனை யார் சிருஷ்டித்தது? அவரைச் சிருஷ்டித் தவரை யார் சிருஷ்டித்தது? இந்த மாதிரியே விசாரணை செய்து கொண்டு போனுல் அது எங்கே முடியும்? ஒரு வேளை ஈஸ்வரன் உலகத்தை உண்டு பண்ணினுர் என்று ஒப்புக்கொண்டால் அவர் ஒருவனைச் சுகியாகவும், ஒருவனைத் துக்கியாகவும், ஒருவனை அரசனுகவும், ஒருவனை ஏழையாகவும், ஒருவனைக் கையில்லாதவனுக வும், ஒருவனை நொண்டியாகவும், ஒருவனைக் குருடனு யும், ஒருவனைச் செவிடாகவும், ஒருவனை புஷ்டியாகவும் ஏன் சிருஷ்டிக்க வேண்டும்? விசித்திரங்கள் நிறைந்த உலகத்தை உண்டாக்கக் காரணம் என்ன? ஈஸ்வர னுடைய தோற்றத்தில் எல்லாரும் சமானமானவர்கள். அப்பொழுது ஒருவனைச் சுகியாகவும் மற்ருெருவனை துக்கியாகவும் செய்வதற்கு அவர் என்ன பக்ஷபாதியா (ஒருதலை சார்பானவரா)?

ஒருவனைக் கொல்வதாலும் ஒருவனை ஜீவித்திருக் கும்படி செய்வதாலும் ஈஸ்வரன் என்ன பிரயோ ஜனத்தை அடைகின்ருர்? இதற்கு விடையாக, 'இந்த எல்லா விசித்திரங்களுக்கும் காரணம் கருமம்' என்று சொல்லக்கூடும் அப்படியானுல் புதிதாக உண்டாகும் ஜீவன்களிடத்துக் கருமம் எங்கிருந்து வந்தது? இதனுல்

உலகம் அனாதி காலத்திலிருந்து இருக்கிறது. ஜீவனும் அனாதிகாலத்தது. கருமமும் அனாதி காலத்திலிருந்தே வருகிறது. ஜீவன் புதிய கருமங்களைப் பந்தித்துக் கொள்கிறது. பழைய கருமங்களை அனுபவிக்கின்றது. இந்தப் பிரகாரம் கருமங்களுக்குத் தக்கபடி ஆத்மன் வேறு வேறு நிலைமையை அடைகின்றது. இதனால் ஈஸ்வரன் கர்த்தாவாகின்றான் எனும் கொள்கை கற்பனையானது. ஒரு வீட்டில் பத்துபேர்கள் இருக்கின்றார்கள். அவர்களைச் சவரக்ஷணை செய்கின்றவர் எத்தனை கஷ்டங்களை எடுத்துக் கொள்ள வேண்டியதாய் இருக்கிறது? எல்லா சம்சார ஜீவன்களுக்காகவும் கஷ்டங்களை ஏற்றுக் கொள்ளும் ஈஸ்வரன் எவ்வளவு கவலையோடு கூடியவராக இருத்தல் வேண்டும்? ஈஸ்வரன் நம்முடைய கொள்கைப்படி பெரிய கஷ்டங்களை உடையவர் என்று கருத வேண்டி வருகின்றது. அத்தகைய கஷ்டங்களோடு கூடிய ஈஸ்வரன் சுகியாய் இருக்கிறார் என்று சொல்வது எப்படி?

ஈஸ்வரன் சாமர்த்திய சாலியாயிருந்தால் எல்லாரையும் சமானமாக ஏன் செய்யவில்லை? சிலர் இவ்வாறு கூறுகின்றனர். பலன் கருமத்தை அனுசரித்திருக்கின்றது. விசித்திரங்களெல்லாம் கருமத்திற்குத் தக்கவாறு தோன்றுகின்றன. அப்படியானால் ஈஸ்வரன் என்ன விசேஷமான காரியத்தைச் செய்துவிட்டார்? ஒவ்வொரு ஆத்மாவிற்கும் அதனுடைய கரும வசத்தினால் கருமத்திற்குத் தக்கவாறு பலன் கிடைக்கின்றது என்றால் ஈஸ்வரனை மத்தியில் கொண்டு வந்து விடுவதற்கு என்ன அவசியம் இருக்கின்றது.

இதனால், இத்தகைய கற்பனை செய்வதற்கு அவசியமே இல்லை. ஆத்மா கருமம் ஆகியவற்றின்

காரணமாகவே எல்லாச் சிருஷ்டியும் உண்டாகின்றது. ஆத்மாவும் கருமமும் அனுதி ஆனபடியால் கரும சம்பந்தமற்ற ஆத்மாவிற்கு சிருஷ்டி முடிவடைகின்றது. ஆத்மா தர்மத்தை அனுஷ்டிப்பதன் மூலமாகக் கருமங்களை நாசம் செய்கிறது. அந்த ஆத்மனுக்குச் சிருஷ்டித் தொழில் முடிவுக்கு வருகின்றது. அது பரமாத்மனுகின்றது.

## ஜைனன்

சன்யாச தர்மத்தை அனுஷ்டிப்பது சாதாரண ஜனங்களுக்கு அதிகக் கடினமானது. இந்த மார்க்கம் மிகவும் கஷ்டத்தோடு கூடியது. திடமுள்ள ஆத்மாக்கள் மட்டுமே இந்த உயர்ந்த மார்க்கத்தில் செல்லமுடியும். இந்தக் கடினமான மார்க்கத்தை அனுஷ்டிக்க முடியாத ஆத்மாக்களுக்காக வேறு மார்க்கம் அதாவது சிராவக தருமம் அல்லது கிரஹஸ்த தருமம் வகுக்கப்பட்டுள்ளது.

## சம்யக்த்வம்

சம்யக்த்வம் என்பது நற்காட்சி, நல்ல நம்பிக்கை, தத்துவங்களில் பூரண சிரத்தை, பரமாத்மனுடைய வசனத்தில் திடமான நம்பிக்கை, தெய்வ விக்கிரகங்களிடத்தில் தெய்வத் தன்மை, குருமூர்த்தியிடத்தில் குருத்வம், தர்மத்தினிடத்தில் வாஞ்சனை ஆகிய குணங்கள் சம்யக்த்வம் எனப்படும்.

(1) விருப்பு, வெறுப்பு ஆகிய தோஷங்களில்லாதவரும், எல்லாம் உணர்ந்தவரும், மூன்று லோகங்களிலும் பூஜிக்கப்பட்டவரும் உண்மையான தத்துவங்களை உபதேசித்தவரும் ஆகிய அரிஹந்த பகவானைப் பரமாத்ம ரூபத்தில் வணங்குதல்.

(2) அஹிம்ஸை முதலான ஐந்து மகா விரதங்களை அனுஷ்டிக்கின்றவர்களும், கோசரி அதாவது வண்டு வைப் போன்று வீடுதோறும் சென்று இல்லறத்தார் கொடுக்கும் உணவை ஏற்றுக்கொண்டு வந்து உண் கின்றவர்களும், சர்வக்கிய பரமாத்மனால் போதிக்கப் பட்ட தருமத்தை உள்ளபடி உபதேசிக்கின்றவர்களும் ஆகிய சாதுக்களைக் குருக்களாகப் பாவித்தல்.

(3) தீய கதிகளுக்குச் செல்லும் ஜீவன்களைத் தடுத்து அவைகளை நல்வழிக்குக் கொண்டு வருவது தர்மம் எனப்படும். அந்தத் தர்மம் தயையை மூலமாக உடையது. சர்வக்கிய பரமாத்மனால் உபதேசிக்கப்பட்ட தர்மத்தை மட்டும் உண்மையான தர்மம் என்று நம்புதல்.

மேலே சொன்ன உண்மையான தெய்வம், உண்மையான குரு, உண்மையான தர்மம் ஆகிய வற்றில் எவனுக்கு முழு நம்பிக்கை இருக்கின்றதோ அவன் ஜைனன் என்று பேசப்படுகிறான்.

## கிரஹஸ்தனுடைய விரதம்

ஜைன கிரஹஸ்தனால் அனுஷ்டிக்கப்பட வேண்டிய விரதங்கள் பன்னிரண்டு. அவற்றுள் முதல் ஐந்து, அணுவிரதங்களென்றும், அடுத்த மூன்று விரதங்கள் குணவிரதங்களென்றும் எஞ்சிய நான்கு விரதங்கள் சிக்ஷா விரதங்கள் என்றும் கூறப்படும்.

**முதலாவது விரதம்:- ஸ்தூல பிராணாதிபாத விரமண விரதம்.**

கிரஹஸ்தன் ஸ்தாவர ஜீவன்களை ஹிம்சிப்பதி னின்றும் முழுவதும் விடுபட்டிருக்க முடியாது.

ஆகையால் கிரஹஸ்தன் சம்பூர்ண ரூபத்தில் தயையை அனுஷ்டிக்க முடியாது. ஆனாலும் நிரபராதிகளான எந்தத் திரஸ பிராணிகளையும் தன் நெஞ்சு அறிய உணர்ந்து கொல்லுதல் கூடாது. ஒவ்வொரு காரியத்தையும் இவ்விதமாக விசாரணை செய்து ஸ்தாவர ஜீவன்களுக்கும்கூடத் துன்பம் உண்டாகாதபடி ஒழுகுதல் வேண்டும். (ஸ்தாவர ஜீவன்கள் நிலம், நீர், நெருப்பு, காற்று, வனஸ்பதி, ஆகியவற்றைச் சரீரங்களாக உடைய ஜீவன்கள்.)

**இரண்டாவது விரதம்:- ஸ்தூல ம்ருஷாவாத விரமண விரதம்.**

கிரஹஸ்தனுக்கு எப்பொழுதும் பொய் பேசுவதை விட்டுவிட முடியாவிட்டாலும் பிறருக்கே பெரும் தீங்கை விளைவிக்கக் கூடிய மித்தியாவசனங்களை (அசத்தியமான வசனம்) அவசியம் பேசாமலிருக்க வேண்டும். பொய் சாட்சி, பொய்யான தஸ்தாவேஜிகள், பொய்யான வழக்குகள், நம்பிக்கையை கெடுக்கக் கூடிய சொற்கள், அனர்த்தத்தை விளைவிக்கக் கூடிய பொய் ஆகியவற்றை எப்பொழுதும் துறக்க வேண்டும்.

**மூன்றாவது விரதம்:- ஸ்தூல அதத்தாதான விரமண விரதம்.**

கீழ்க்கண்டவாறு கிரஹஸ்தன் திருடுதலை முற்றும் துறத்தல் வேண்டும். ஏதாவது காரணத்தினால் முழுவதும் துறக்க முடியாவிட்டால் கீழ் கண்டவற்றை யாவது அவசியம் விட்டே தீரவேண்டும். பிறருடைய ஜேபியைக் கத்தரித்தல்; பூட்டை உடைத்தல்; அதிகமாகக் கொண்டு குறைவாகக் கொடுத்தல்; வீட்டில் கன்னம் வைத்தல்; திருட்டுப் பொருளை வாங்குதல்;

ஊரைக் கொள்ளையடித்தல் ஆகிய பெரும் திருட்டுக் களை அவசியம் தியாகம் செய்தல் வேண்டும்.

**நான்காவது விரதம்:-ஸ்தூல மைதுன விரமண விரதம்.**

கிரஹஸ்தனுல் பிரம்மசரிய விரதத்தை எப்பொழுதும் அனுஷ்டிக்க முடியாவிட்டால் அவன் அன்னிய ஸ்திரீகளை அவசியம் தியாகம் செய்தல் வேண்டும். தன் மனைவியுடன் மிதமான சேர்க்கையை வைத்தல் வேண்டும். அதாவது ஒவ்வொரு மாதத்திலும் சில தினங்களிலாவது பிரம்மசர்யத்தை அனுஷ்டித்தல் வேண்டும்.

**ஐந்தாவது விரதம்:- ஸ்தூல பரிக்கிரக பரிமாண விரதம்.**

இச்சையை விடுவதற்காக ஒவ்வொரு வஸ்துவையும் மட்டுப்படுத்த வேண்டும். தனம், தானியம், வீடு ஆகியவற்றை தேவைக்கு மேலாகச் சேர்த்தல் கூடாது. அவற்றிற்கு ஓர் அளவு வைத்துக் கொள்ளுதல் வேண்டும். வியாபாரம் செய்தல் முதலான தொழில் களினுல் அதிகமான பணம் சேர்க்கும்படி நேர்ந்தால் அதில் அளவுக்கு மிஞ்சி வந்ததைத் தர்ம சம்மந்தமான ஸ்தாபனங்களிலும் ஏழைகள், துக்கிகள் ஆகியவர் களின் நன்மைக்காகவும் செலவு செய்தல் வேண்டும்.

**ஆருவது விரதம்:- திசாபரிமாண விரதம்.**

வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய திசை களிலும் இவைகளுக்கு மத்தியிலுள்ள வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு ஆகிய நான்கு கோண திசைகளிலும், மேலும் கீழும் ஆகியவற்றிலும்

போவதையும் வருவதையும் அளவுப் படுத்தித் கொள்ள வேண்டும்.

**ஏழாவது விரதம்:-போகோப போக பரிமாண விரதம்.**

அநுபவிக்கக் கூடிய பொருள்களை மட்டுப் படுத்து தல். அதாவது இன்று நான் இத்தனை வஸ்துக்களுக்கு மேல் உபயோகிப்பதில்லை என்று நியமனம் செய்து கொள்ளுதல். அதற்காக பதினுங்கு விதமான நியமங் கள் கூறப் பெற்றுள்ளன. பாப பரிணுமத்தை உண்டு பண்ணுகின்ற வியாபாரங்களை செய்தல் கூடாது. அவற் றிலுங்கூட முக்கியமாக ஜீவஹிம்ஸையை வளர்க்கக் கூடிய எந்தத் தொழிலையும் செய்யவே கூடாது. தன் ஜீவகால பரியந்தம் உணவு கொள்ளுதல், பருகுதல், சரீரத்தில் தரித்துக் கொள்ளுதல், போர்த்துக் கொள்ளு தல் ஆகிய சரீரத்திற்கு உபயோகமான எல்லாவஸ்துக் களையும் அளவுங்கு மீறி உபயோகப் படுத்தவேகூடாது.

**எட்டாவது விரதம்:-அனர்த்த தண்ட விரதம்.**

கெட்ட தியானத்தைச் செய்தல் கூடாது. தீய சிந்தனையால் ஆத்மா இந்தச் சரீரத்தை விட்டு கெட்ட பிறவிகளில் பிறக்கின்றது. யாருக்கும் பாபசம்பந்தமான உபதேசத்தைச் செய்யக்கூடாது. வாள், வில், அம்பு, ஈட்டி முதலிய கொடிய ஆயுதங்களைத் தயார் செய்தல் கூடாது. பொய்யான கதைகளை இயற்றுதல் கூடாது. தேசகதை, ஸ்திரீ கதை, போஜன கதை, ராஜ கதை ஆகியுவற்றை விலக்குதல் வேண்டும். சினிமா, சர்க்கஸ், ஆகியவற்றைப் பார்த்தல் கூடாது. வியர்த்தமாகப் பாப கர்மங்கள் செய்தல் தகாது. ஹிம்ஸையைச் செய்யும் பிராணிகளை வளர்க்கக் கூடாது.

### ஒன்பதாவது விரதம்:- சாமாயிக விரதம்.

மனதைச் சமாதி நிலையில் வைத்துக்கொண்டு எப்பொழுதும் சமதையோடு இருப்பதற்காகத் தினந்தோறும் நாற்பத்தெட்டு நிமிஷ பரியந்தம் சம பாவத்தோடு இருப்பதற்குச் சாமாயிக விரதம் என்று பெயர். பரமாத்மனைப் பற்றித் தியானித்தில் வேண்டும். ஆத்ம விளக்கத்தை அடைவதற்கு உபயோகமான புஸ்தகங்களைப் படித்தலும் படிப்பித்தலும் வேண்டும். வியாபாரம், வீட்டு வேலைகள் ஆகியவற்றினின்றும் விலகி நாற்பத்தெட்டு நிமிஷபரியந்தம் ஒரே மனதுடன் தர்மத்தியானம் செய்தல் வேண்டும்.

### பத்தாவது விரதம்:-தேசாவகாசிக விரதம்.

ஒரு வருஷத்தில் ஒரு நாளைக்காவது சகலவிதமான தொழில்களையும் விட்டுத் தவக்கிரியைகளைச் செய்வதோடு பத்து சாமாயிகம் செய்தல் வேண்டும்.

### பதினோராவது விரதம்:-பௌஷத விரதம்.

ஆயுஷ்ய பரியந்தம் சாது வாழ்க்கையை அனுஷ்டிக்க முடியாதவர்கள் ஒவ்வொரு வருஷமும் குறைந்தது ஒரு நாளைக்காவது உபவாசத்தோடு கூடிய தவக்கிரியைகளையும் பௌஷத விரதத்தையும் மேற்கொண்டு அனுஷ்டித்தல் வேண்டும். இந்த விரதத்தை அனுஷ்டிக்கும் பொழுது சகல பற்றுக்களையும் தொழில்களையும் முற்றும் துறந்து பதினைந்து அல்லது பதினான்கு மணிநேரம் வரையில் சமபாவனையோடு ஞானம், தியானம் ஆகியவற்றில் தளராது நிற்றல் வேண்டும்.

**பன்னிரண்டாவது விரதம்:-அதிதி சம்விபாகவிரதம்.**

வருஷத்தில் குறைந்தது ஒரு நாளேக்காவது இருபத்துநான்கு மணி நேரமும் நான்கு விதமான ஆகாரங்களேயும் முற்றும் துறந்து உபவாச விரதத்தை அனுஷ்டித்தல் வேண்டும். மறு நாள் ஒரே தடவை உணவு கொள்ளுதல் வேண்டும். அந்தச் சமயத்தில் தியாகி குரு மகாராஜுக்கு போஜனுதிகளே வழங்குதல் வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கும் வஸ்துக்களேயே இவனும் உபயோகித்தல் வேண்டும். எந்தக் காரணத்திஞலாவது சாதுக்கள் கிடைக்காவிட்டால் தன்னுடைய தருமத்தை அனுஷ்டிக்கின்ற பந்துக்களுக்கு உணவு கொடுத்தல் வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கும் வஸ்துவையே இவனும் உபயோகித்தல் வேண்டும்.

மேலே சொல்லப்பட்ட பன்னிரண்டு விரதங்களேயும் அனுஷ்டிக்கக்கூடியவர்கள் கட்டாயம் அனுஷ்டிக்க வேண்டும். அவ்வாறு அனுஷ்டிக்க முடியாதவர்கள் என்னென்ன விரதங்களே அனுஷ்டிக்க முடியுமோ அந்த விரதங்களேக் கூடிய வரையில் குற்றமில்லாமல் அனுஷ்டிக்க வேண்டும். ஏதாவது ஒரு விரதத்தையாவது அனுஷ்டிக்கின்றவன் 'விரததாரி' ஜைனன் என்று அழைக்கப்படுகின்ருன்.

ஒரு விரதத்தைக்கூட அனுஷ்டிக்க முடியாதவர்கள் பரமாத்ம பூஜை, தரிசனம், குருவந்தனே ஆகியவற்றைத் தினந்தோறும் செய்வதோடு புசிக்கக் கூடாத வஸ்துக்களேயும், கந்த மூலங்களேயும் (கிழங்கு, வேர் ஆகியவைகள்) இரவில் உண்பதையும் முற்றிலும் விட்டு விட வேண்டும். நல்ல புத்தகங்களே வாசிப்பதோடு தன் தர்மத்தை அனுஷ்டிக்கின்றவர்களிடத்து

பக்தியும், ஏழைகள், துக்கிகள் ஆகியவர்களுக்குத் தன் சக்திக்கு ஏற்றவாறு தானத்தையும் செய்தல் வேண்டும். சாமாயிகம், பிரதிக் கிரமணம், தவம், ஜபம், நமஸ்கார மந்திரத்தை உச்சரித்தல் ஆகிய நித்திய கடமைகளைப் பக்தியோடு செய்தல் வேண்டும். இந்த ஆசாரங்களை அனுஷ்டிக்கின்றவன் ஜைனன் என்று கூறப் படுகின்றான்.

மேலே சொல்லப்பட்ட எதையும் செய்ய முடியாத ஒருவன் பரமாத்மாவான ஜினேஸ்வர தேவனால் உபதேசிக்கப்பட்ட வசனங்களைப் பக்தியுடன் நம்புவானாகில் அவன் கூட ஜைனன் என்று அழைக்கப்படுகின்றான்.

மேலே சொன்ன விதிகளின்படி கிரியைகளைச் செய்கின்றவன் கிரமமாகக் கருமங்களை மட்டுப்படுத்தி நல்ல கதியை அடைகின்றான். கடைசியாக சிவபுரியில் அபூர்வ ஆனந்தத்தை அனுபவிக்கின்றான்.

இந்த விவரங்களினால் ஜைன தர்மம் எவ்வளவு விசாலமானதென்று அறியக் கிடக்கின்றது. சம்சாரத்திலுள்ள எல்லாப் பிராணிகளும் ஜைன தர்மத்தை அங்கீகரித்துத் தங்களால் ஆனவரை அனுஷ்டிக்கக்கூடும்.

அநேகர் இந்த உண்மையை உணராமல் ஜைன தர்மம் அனுஷ்டிக்க முடியாத ஒரு தருமம் என்று சிறிதும் யோசிக்காமல் சொல்லி விடுகின்றார்கள். ஆனால், அவர்கள் உண்மையாகவே ஜைன தர்மத்தின் சித்தாந்தம் எவ்வளவு விசாலம் என்பதை அறியாதவர்கள். மிகவும் கீழ் நிலையிலுள்ள பிராணிகளும் இந்தத் தர்மத்தை அல்பமாகவோ அல்லது அதிகமாகவோ வழிபட முடியும்.

கடைசியாக ஜைன தருமத்தில் யாருக்கு விசுவாசம் இருக்கின்றதோ அவரையும் ஜைனன் என்று சொல்லலாம்.

ஜைன தருமத்தின் சித்தாந்தங்களை விசேஷமாகத் தெரிந்துகொள்வதற்காக அவற்றைப்பற்றி எழுதப்பட்டுள்ள அநேக புஸ்தகங்களைக் கேட்டு, படித்து சிந்தனை செய்து ஞாபகத்தில் வைத்தல் வேண்டும்.

ஜைன சித்தாந்தத்தின் கர்ம தத்துவத்தைப் பற்றி மட்டும் நூற்றுக்கணக்கான பெரிய கிரந்தகங்களும் ஆயிரக் கணக்கான சுலோகங்களும் இன்றும் கிடைக்கின்றன. ஜோதிடம், விஞ்ஞானம், கர்ம சித்தாந்தம், ஆத்மவாதம், பரமாத்மவாதம் ஆகமஞ்ஞானம், நியாயம், வியாகரணம், சந்தம், அலங்காரம், தர்க்கம், ஆசார விசாரம் ஆகிய அநேக விஷயங்களைப்பற்றி ஆயிரக் கணக்கான கிரந்தகங்கள் இன்றுகூட நிலை பெற்றுள்ளன.

அந்தக் கிரந்தங்களை, அவற்றில் மிகவும் தேர்ச்சியடைந்த வித்வான்களின் சகாயத்தினுல் கற்றல் வேண்டும்.

நடு நிலைமையோடு கூடிய நோக்கத்தையுடைய எவன் ஒருவன் உண்மையான தியாகி குருவை அடைந்து அவருடன் தங்கி இந்த அபூர்வ கிரந்தகங்களின் சூக்ஷ்மமான உண்மையை அறிகின்றுனே அவனுக்கு நிச்சயமாக திவ்ய திருஷ்டி உண்டாகின்றது.

# சியாத்வாதம்

ஜைன சித்தாந்தம் சியாத்வாதத்தை அடையாள மாகவுடையது. சியாத்வாதம் அனேகாந்தவாதம் என்றும், அபேக்ஷாவாதம் என்றும் அறியப்படும். எந்த வஸ்துவையும் உண்மையான ரூபத்தில் அறிய வேண்டுமானல் அபேக்ஷைகளுக்கு அவசியம் ஏற்படு கின்றது. ஜைன சித்தாந்தத்தின்படி அபேக்ஷை என் பது நயம் என்று கூறப்படுகின்றது.

சியாத்வாதம் உண்மையான வாதம். ஏகாந்த வாதம் மித்தியா வாதமாகும். ஒரு வஸ்துவை ஒரே விதத்தை அனுசரித்துச் சொல்வது மூடத் தன்மை ஆகும். ஏனென்ருல் அதற்கு வேறு பக்ஷமும் இருக் கின்றது. ஒரு வஸ்துவை அநேக விதங்களாகக் கவனித்து அதைப்பற்றிய ஞானத்தை அடைவது சியாத்வாத மெனப்படும். எப்படி யென்ருல் எழுபத்தைந்து வய துள்ள ஒரு பெரியவர் இருக்கின்ருர். அவருக்கு முப்பத்தைந்து வயதுள்ள ஒரு குமரன் இருக்கிருன். அவனுக்குப் பதினைந்து வயதுள்ள ஒரு புத்திரன் இருக் கிருன்.

இப்பொழுது முப்பத்தைந்து வயதுள்ள அந்த மனிதனை பிதா என்று சொன்னல் அந்த வசனம் மித்தியா வசனமாகும்; ஏனென்ருல் எழுபத்தைந்து வயதுள்ள அவனுடைய தந்தையை கவனிக்கும் பொழுது இவன் புத்திரனுகின்ருன். இந்தப் பிரகாரம் முப்பத்தைந்து வயதுள்ள அவனை புத்திரன் என்று சொன்னல் அந்த வசனமும் பொய்யாகின்றது. ஏனென்ருல், தன்னுடைய பதினைந்து வயதுள்ள

குமாரனை நோக்கும்பொழுது இவன் அந்தப் பைய னுக்கு பிதாவாகின்றான். இந்த மாதிரி அவன் ஒரு வனே பிதாவாகவும் இருக்கின்றான், புத்திரனாகவும் இருக்கின்றான். இன்னும் வேறு பல அபேக்ஷைகளின் படி அவன் ஒருவனுக்கு மாமாவாகவும். ஒருவனுக்குச் சகோதரனாகவும் ஒருவனுக்குச் சிற்றப்பனாகவும் ஒரு வனுக்குப் பாட்டனாகவும்.

ஆகிய அநேக விதமான சொந்தத்தையுடையவ னாகிறான். எல்லா விதமான சொந்தங்களும் ஒரு வனிடத்தில் சேர்ந்திருப் பதைக்காண்கின்றோம். இவ் விதமாக, வஸ்துவைப் பலவிதமான நோக்கத்தோடு கவனிக்கும்பொழுது அதைப் பற்றிய உண்மையான முழு அறிவு கிடைக்கின்றது. வஸ்துவின் பலவகை யான குணங்களை நானாவிதமான நோக்கங்களினால் சியாத்வாதம் வேறு படுத்தித் தருகின்றது.

இதனால் வஸ்துவின் பூரண சொரூபத்தை அறி விக்கக்கூடியது சியாத்வாதம் ஒன்றே ஆகும். வஸ்துவி னுடையஒரு குணத்தை மட்டும் அல்லது ஒரு சுபா வத்தைமட்டும் கவனித்து அந்த வஸ்து இது என்று சொல்வது மயக்கத்தைத் தருவதாகும். ஏனென்றால் அந்த சமயத்தில் அநேக வேறு குணங்களும் அந்த வஸ்துவினிடத்தில் இருக்கின்றன. சியாத்வாதத்தை நன்றாக அறிந்துகொண்டால் வஸ்துவின் உண்மை யான சொரூபத்தை அறிய முடியும். நம்மால் பார்க் கப்படுகின்ற இந்த உலகம் என்ன? அதனுடைய வஸ்துக்கள் எத்தன்மையன? அதனுடைய சுபாவம் என்ன? அவற்றின் குண பரியாயங்கள் எத்தனை? இத்தகைய வஸ்துக்களின் உண்மையான ரூபத்தை அறிவிக்கக்கூடியது சியாத்வாதமாகும். ஜைன தரி

சனத்திற்கு அஹிம்சாவாதம், அபரிக்கிரஹவாதம், சியாத்வாதம் ஆகியவை மிகவும் திடமுள்ள ஸ்தம் பங்களாகும். இதனுலேயே இன்று இஃது உலகத்தில் எல்லாவற்றிற்கும் மேலானதென்று போற்றப்படுகின் றது. இந்த சித்தாந்தங்களின் காரணத்தினுல் ஜைனசம யம் விஸ்வ தர்மம் என்று போற்றக்கூடியதாக இருக் கின்றது.

ஜைன தரிசனத்தை அறிந்த பிறகு அஹிம்சை யைப் பற்றி ஏற்படும் அபிப்பிராயம் மிகவும் குறிப் பிடத் தக்கது. அதனே அனுஷ்டிக்கும் மனிதனே அது தைரியமுற்றவனுயும், வலிமை சாலியாகவும் செய்கின் றது! எதை ஜீவன் என்று கூறுவது. அது எங்கே வசிக்கின்றது? அதனுடைய சொரூபம், பாவதயை, திரவ்ய தயை, ஹிம்ஸை, அஹிம்ஸை கர்மதத்துவம் ஆகிய அபூர்வ தத்துவங்களின் ஞானம் ஜைன சித்தாந் தில் மட்டும் கிடைக்கின்றன.

## ஆறு திரவியங்கள்

ஆறு திரவியங்களாவன: (1) தர்மாஸ்திகாயம் (2) அதர்மாஸ்திகாயம். (3) ஆகாஸாஸ்திகாயம். (4) புத்கலாஸ்திகாயம், (5) ஜீவாஸ்திகாயம். (6) காலம்.

(1) தர்மாஸ்திகாயம்:- நடமாடுகின்ற பிராணி களுக்கும், செல்கின்ற ஜட வஸ்துக்களுக்கும் அவை களின் செல்கைக்குச்சகாயமாய் இருக்கும் வஸ்துவிற்குத் தருமம் என்று பெயர். அஸ்திகாயம் என்பதற்குப் பிர தேசத்தையுடையது என்பது பொருள். தர்மம் என் னும் பதார்த்தத்தின் பிரதேசங்களின் சேர்க்கைக்கு

தர்மா ஸ்திகாயம் என்பது பெயர். மீனிடத்தில் செல்லும்படியான சாமர்த்தியம் இருக்கிறது. அசைவதற்கு அதற்கு இச்சையும் இருக்கிறது. ஆனல் அது நிமித்த காரணமான ஜலம் இல்லாவிட்டால் நீந்த முடியாது. ஜலத்தைப் போன்று ஜீவ புத்கலன்களின் செல்கைக்குச் சாதனமாயிருப்பது தர்மாஸ்திகாயம் ஆகும்.

**(2) அதர்மாஸ்தி காயம் :-** இது பிராணிகள் நிற்பதற்கு சகாயமா யிருக்கின்றது. எதாவது ஓர் இடத்தில் சதாவிருத்தி (போஜனமளித்தல்) நன்ருக நடக்குமாஞல் பிக்ஷுக்களுக்கு அங்கே தங்குவதற்கு இச்சை உண்டாகின்றது. இந்தச் சதாவிருத்தி பிக்ஷுக்களின் கையைப் பிடித்து அங்கே இழுத்துச் செல்வதில்லே. ஆனல் சதா விருத்தி நடப்பதை யறிந்து பிக்ஷுக்கள் அங்கே சென்று தங்குகின்ருர்கள். நடந்து செல்கின்ற ஒரு யாத்ரீகன் களேப்படைந்த பொழுது அவனுக்கு நிழலேத் தருகின்ற விருக்ஷத்தைப் போல ஜீவன்களும், புத்கலங்களும் அசையாமல் நிற்றற்கு அர்மாஸ்திகாயம் சகாயம் செய்கின்றது.

**(3) ஆகாஸா ஸ்திகாயம் :-** இதனுடைய குணம் மற்றத் திரவியங்கள் இருத்தற்கு இடம் தருவதாகும். ஆகாசத்தைக் கண்களாலோ அல்லது வேறு இந்திரியத்தாலோ அறியமுடியாது. ஆனல் அதனுடைய அவகாஹ குணத்தினல் (மற்ற வஸதுக்கள் இருப்பதற்கு இடம் தருவதினல்) அது உண்டென்று அறியப்படுகின்றது. லோக சம்மந்தமான ஆகாசத்தை லோகாகாசம் என்றும் அலோக சம்மந்தமான ஆகாசத்தை அலோகாகாசம் என்றும் வழங்குவர். லோகத்தில் ஜீவன் புத்கலம் ஆகியவற்றின் செல்கைக்குத் தர்மாஸ்தி

காயமும் அவற்றின் நிற்றலுக்கு அதர்மாஸ்தி காயமும் சகாயம் செய்கின்றன. இந்த இரண்டு திரவியங்களும் அலோகத்தில் இல்லாதபடியால் அங்கே ஓர் அணு வாவது அல்லது ஒரு ஜீவனுவது இல்லை. அங்கே லோகத் தினின்றும் எந்த அணுவும் எந்த ஜீவனும் போக முடி யாது. ஏனென்ருல் செல்வதற்குச் சகாயம் செய்யும் தர்மமும் நிற்றலுக்கு உபகாரியாகும் அதர்மமும் அங்கே இல்லை. ஆகாசத் திரவியம் அனந்தமானது. அதாவது அதற்கு முடிவே இல்லை.

(4) **புத்கலாஸ்திகாயம்:-** பரிபூரணமாதல், விழு தல், தனித்தனியாகுதல் ஆகிய சுபாவங்களையுடைய பதார்த்தம் புத்கலம் எனப்படும். புத்கலத்தில் சில வற்றை நாம் பிரத்தியட்சமாகப் பார்க்கிறோம். பர மாணுரூபமா யிருக்கின்றவற்றை அனுமானப் பிர மாணத்தால் அறிகின்றோம். குடம், பாய், மணை, வீடு, வண்டி ஆகிய பதார்த்தங்கள் ஸ்தூல புத்கலமானவை. ஏனென்ருல் இந்த எல்லாப் பதார்த்தங்களும் நம் முடைய பார்வைக்குத் தெரிகின்றன. இவையன்றி அதிக சூக்ஷ்மமாயுள்ள புத்கலங்கள் உண்டென்று அனு மானப் பிரமாணத்தினுல் அறியப்படுகின்றது. சப்தம், ஒளி, நிழல், வெய்யில், இருட்டு ஆகியவைகளும் புத்கலங்களாம்.

(5) **ஜீவாஸ்திகாயம்:-** சைதன்ய சொரூபியான ஆத்மா ஜீவன் எனப்படும். 'நான் சுகியாய் இருக்கின் றேன்,' 'நான் துக்கியாய் இருக்கின்றேன்' என்கின்ற இந்த அனுபவங்கள் ஒரு பிணத்தினிடத்தில் காணப் படுவதில்லை. ஏனென்ருல் அதனிடத்தில் சைதன்ய சொரூபியான ஆத்மா இல்லை. அது தன்னுடைய சரீரத்தை விட்டுவிட்டுத் தன் கருமத்திற்குத் தக்கபடி

வேறு சரீரத்திற்குப் போகின்றது. கோடரியினுல் மரம் வெட்டப்படுகிறது. ஆனுல் கோடரியும் வெட்டு கின்றவனும் தனித் தனியாய் இருக்கின்ருர்கள். தீபத் தினுல் பார்க்கப்படுகின்றது. ஆனுல் பார்ப்பவனும் தீப மும் வேறுவேருன வஸ்துக்கள். இந்த விதமாக இந்தி ரியங்கள் மூலமாக, ரூபம், ரஸம் ஆகியவற்றை அறி கின்றோம். ஆனுல் இந்திரியங்களும் அவற்றின் மூலம் விஷயங்களை அனுபவிக்கின்றவனும் வேறுவேருன பொருள்கள். ஆத்மா, வெள்ளை, கறுப்பு, மஞ்சள் ஆகிய வர்ணங்களை யுடையதல்ல. இதனுல் சரீர சம்மந்தமா யுள்ள கண்களால் ஆத்மாவைப் பார்க்க முடியவில்லை. அப்படி இருந்தும் அனுமானப் பிரமாணத்தினுல் அது உண்டு என்று ஸ்தாபிக்கப்படுகிறது.

(6) **காலம் :-** காலம் அநேகச் சமயங்களையுடை யது. அவைகள் ஒன்றன் பின் ஒன்ருகச் செல்கின்றன. அதாவது ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு பிர தேசத்தை உடையது. காலம் மற்றத் திரவியங்களைப் போல விஸ்தாரமான அநேகப் பிரதேசங்களையுடைய தல்ல. ஒரே ஜாதி மரங்கள் ஒரே காலத்தில் அந்தக் காலத்திற்குத் தகுந்தபடி விசித்திர மாறுதல்களை அடைகின்றன. அந்த மாறுதல்களுக்குக் காரணமாய் இருப்பதைக் காலம் என்கிறோம். இந்த மாணுக்கன் சிறியவன். இந்தப் பையன் பெரியவன் என்று அறிந்து சொல்வது காலத்தின் சகாயத்தினுல் அல்லாமல் வேறு எப்படி முடியும்? இதனுல் காலம் என்னும் பொருள் ஒன்று உண்டு என்று சந்தேகமில்லாமல் ஒப்புக் கொள்ள வேண்டியது அவசியம்.

இந்த ஆறு திரவியங்களும் சாசுவதமான பொருள்கள் என்று ஜைனதரிசனம் கூறுகின்றது.

தற்காலத்தில் விஞ்ஞானிகள் கூட அவற்றை ஒரு வாறு ஒப்புக்கொள்கின்றனர். ஆத்மாவும் புத்கலமும் சுதந்திரமாகவே செல்லவும், நிற்கவும் கூடியவை. ஆனால் இவைகளின் செய்கைக்குத் தர்மாஸ்திகாயமும், அதர்மாஸ்திகாயமும் துணையாயிருக்கின்றன. இந்த ஆறு திரவியங்களைப்பற்றியும் விரிவாகச் சொல்ல வேண்டுமானால் இங்கே இடம் போதாது. ஆகையால் இங்கே மிகவும் சுருக்கமாகவே கூறியுள்ளோம்.

## ஜைன தவம்

ஜைனர்களுடைய தவம் உலகத்தில் மிகவும் பெயர் பெற்றது. ஜைனர்களுடைய உபவாசம் அதிகக் கடினமானது. இந்த உபவாசத்தில் (பட்டினியில்) இரவிலும் பகலிலும் பலகாரம், உணவு, பழம் ஆகிய எதையும் சாப்பிடவே கூடாது. தவக்கிரியை, இந்திரியங்களை அடக்குவதற்காகவே அனுஷ்டிக்கப் படுகின்றது. ஜைனர்கள் தங்களுடைய ஆத்மாவைச், சுத்தி செய்வதற்காக மாதக் கணக்காகச் சந்தோஷத்துடன் இத்தகைய கடுமையான தவத்தை அனுஷ்டிக்கின்றார்கள். இந்தத் தவக்கிரியையை விதியோடு அனுஷ்டித்தால் சரீர சுத்தியும் உண்டாகின்றது. அநேகக் கொடிய வியாதிகளும் தாமகவே விலகிப் போகின்றன. கஷ்டங்கள் தூரே செல்கின்றன. தீய கருமங்கள் (பாவங்கள்) நாசமடைகின்றன. அந்தராய கருமம் நஷ்டமடைகின்றது. ஆத்மா புண்ணியசாலியாகவும் சுகியாகவும் விருத்தியடைவதாகவும் ஆகின்றது. ஆயிரக்கணக்கான ஜீவன்களுக்கு ஆதார ரூபமாகின்றது. இத்தகைய தவத்தைச் செய்வதனால் ஆயிரக்கணக்கான ஜீவன்களுக்கு ரக்ஷணை உண்டா

கின்றது. இதனால் தவத்தில் தயையும் அடங்கியுள்ளது. தவத்தினால் தருமம் விருத்தியடைகின்றது. பாவம் நாசத்தை அடைகின்றது, சுகம் பெருகுகின்றது. துக்கம் குறைகின்றது. ஐசுவரியம் விருத்தியடைகின்றது. தரித்திரம் நஷ்டமடைகிறது. ஆத்மா புகழை அடைகின்றது. ஆகையால் ஒவ்வொரு மனிதனும் தன் சக்திக்குத் தக்கவாறு தவத்தைச் செய்தல் வேண்டும்.

லௌகிக சம்பந்தமான பருவங்களில் பற்பலஜனங்கள் தங்களுடைய ஆத்மாவின் உண்மையான ரூபத்தை மறந்துவிட்டு ஆத்மாவிற்கும் அனுகூலம் இல்லாத காரியங்களில் வீணாகக் காலத்தைக் கழிக்கின்றார்கள். தங்களுடைய இஷ்டப்படியே நடக்கின்றார்கள். ஆனால் ஜைனர்களுடைய பருவங்களில் ஒரு மகத்துவம் உண்டு. அதாவது அந்தக் காலங்களில் அவர்கள் தங்கள் இந்திரியத்தை வசப்படுத்துவதற்காகவும், தவம், தியாகம், அடக்கம் ஆகியவற்றைப் பழகுவதற்காகவும் கற்றுத் தெளிகின்றார்கள். ஜைனர்களுடைய எல்லா பருவங்களும் அவைகளை அனுஷ்டிப்பவர்களுடைய ஞானத்தை விருத்தி செய்கின்றன.

## ஞானக்ரியாப்யாம் மோக்ஷ

ஞானத்தினால் மட்டும், கிரியையால் மட்டும் முக்தி கிடைக்காது என்பது ஜைன சித்தாந்தத்தின் கொள்கை. ஞானம் மட்டும் நொண்டிக்குச் சமானம். கிரியை மட்டும் குருடனுக்குச் சமானம். ரதம் இரண்டு சக்கரங்களால் தான் செல்ல முடியும். மனிதன் தன்னுடைய இரண்டு புஜங்களாலும் சமுத்திரத்தை நீந்திச் செல்ல முடிகின்றது. இந்த மாதிரி ஆத்மாவும்

Q3
N54



சம்யக்ஞானம், சம்யக் கிரியை, ஆகிய இரண்டினாலும் மோக்ஷத்தை அடைய முடியும். ஒரு மனிதன் பம்பாய் நகருக்குச் செல்வதற்கு வழியை தெரிந்துகொண்டிருக்கிறான். ஆனால் வழியை தெரிந்து கொள்வதால் மட்டும் அவன் அங்கே சென்றுவிட முடியாது. அவன் அங்கே சேர்வதற்காக பிரயாணம் செய்ய வேண்டும். கொஞ்சகொஞ்சமாகவாவது அவன் சென்று கொண்டே இருந்தால் தான் அவன் குறிப்பிட்ட இடத்தைப் போய்ச் சேரலாம். போஜனத்தின் பெயரைத் தெரிந்து கொண்டால் மட்டும் பசி நீங்கிவிடாது. அந்தப் போஜனத்தை செய்யும் முறையையும் தெரிந்து கொள்ளல் வேண்டும். போஜனத்தை தயார் செய்த பிறகும் அதை உண்ணும் வரைக்கும் பசி நீங்காது. உண்ட பிறகே பசியடங்குகின்றது. அந்தப் பிரகாரம் சம்யக்ஞானத்தோடு கூடி நல்ல கிரியைகளை அனுஷ்டித்தால் ஆத்மா, முக்திபுரிக்குச் செல்ல முடியும். ஏனென்றால் அனந்த காலத்திலிருந்து ஆத்மா ஞானமின்மையாலும் பிரயோஜனமற்ற கிரியைகளாலும் கர்மங்களைப் பந்தித்துக் கொண்டு வந்திருக்கின்றது. அவைகளை நாசம் செய்வதற்காக நல்ல ஞானமும் நல்ல கிரியைகளும் முற்றிலும் அவசியமானவை.

TAMIL NADU ARCHIVES
No. 112062

## தற்கால விஞ்ஞானம்

இன்று விஞ்ஞானம் விரைவில் விருத்தியடைந்து கொண்டே வருகின்றது. அதனுடைய அபிவிருத்தியைப் பார்த்து ஜனங்கள் வியப்பையும் பயத்தையும் அடைந்துள்ளார்கள். நாம் பொறுமையோடு விசாரணை செய்வோமானால் இந்த விஞ்ஞான விருத்தியினால் சுகமும் சாந்தியும் விருந்தியடைந்தனவா என்பது

விளங்கும். உண்மையில் அவைகள் விருத்தியடைய வில்லே. உலகத்தில் உள்ளவற்றை அழிப்பதற்காகவே ஹஸ்திரங்களும், சஸ்திரங்களும் வேறு பொருள் களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகளின் விருத்தியினுல் உலகத்தில் விநாசமே ஒழிய வேறு எதுவும் காணப்படவில்லே.

நம்முடைய ரிஷிகளும் மகரிஷிகளும் இந்த எல்லா வஸ்துக்களேயும் நன்ருக அறிந்திருந்தார்கள். அப் படி யிருந்தும் அவர்கள் அவைகளே உபயோகப்படுத்த வில்லே. ஆத்ம உன்னதிக்குச் சாதனமான வழியை மட் டும் போதித்துச் சென்ருர்கள். அதற்குக் காரணம் என்ன? ஜட வஸ்துக்களே உபயோகப்படுத்துவதால் பயங்கரமான நாசமும் ஆத்மாவின் மூல குணங்களின் கெடுதியும், தோஷமில்லாத பிராணிகளின் நாசமும் அதிகப் பணச்செலவும், வீணுகக் காலம் கழிவதும் உண் டாகும் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

இந்த விஷயம் எல்லாருக்கும் தெரிந்தது. ஓர் அணுகுண்டுவை உபயோகப் படுத்துவதால் லக்ஷக் கணக்கான ரூபாய் செலவழிகின்றன. ஒரு தேசம் அணுகுண்டுவை உபயோகப் படுத்துவதால் லக்ஷக் கணக்கான பிராணிகள் நாசமடைகின்றன. அந்த அணுகுண்டுவைச் செய்வதற்காக லக்ஷக்கணக்கான ரூபாய் செலவழிக்கின்றன. ஒரு தேசம் அணுகுண்டு வைத் தயாரித்து உபயோகப்படுத்திஞல் வேருெரு தேச மும் அதே மாதிரி செய்ய ஆரம்பிக்கின்றது. அணு குண்டுவை தயாரிக்க எவ்வளவு பணம் செலவாகின் றதோ அதில் தம்பிடிக்கூட திரும்பக் கிடைப்ப தில்லே. சம்ஹாரமும் துவேஷ விருத்தியும் உண்டா கின்றன. இத்தகைய கொடுமையான ஆயுதங்களால்

உலகத்திற்கு நன்மை ஏற்படாது. இந்த வீணான செலவுகளை நிறுத்தித் துக்கிகள் ஏழைகள் ஆகியவர்களின் மேம்பாட்டிற்காக இந்தப் பொருளைச் செலவு செய்தால் கோடிக்கணக்கான ஜனங்களுக்கு நன்மை உண்டாகும். இந்த விதமான விஷயத்தை அறிந்து யாவருக்கும் சொல்வது மிகவும் அவசியமானது.

யந்திர வாதத்தினால் இன்று ஆயிரக்கணக்கான ஜனங்கள் கஷ்டப்படுகின்றார்கள். மனிதர்கள் ஏழைகளாயும் சக்தியற்றவர்களாயும், தைரியமற்றவர்களாயும் ஆகிவிட்டனர். இவைகளுக்குக் காரணம் யந்திரவாதம்தான். அதாவது எல்லா விஷயங்களையும் யந்திரங்களின் உதவியினால் செய்து கொள்ளுதல் யந்திர வாதம் எனப்படும். எவ்வளவுக் கெவ்வளவு சாதனங்கள் விருத்தி அடைகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு உலகத்தில் துக்கமும் சாந்தமின்மையும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. பழைய காலத்தில் நம்முடைய தேசம் எவ்வளவு சுகமுள்ளதாயும், குறைவற்றதாயும் இருந்தது. தேசத்தில் எவ்வளவு சாந்தி நிலவிற்று. இன்று நாலா பக்கங்களிலும் பயத்தின் நிழல் காணப்படுகின்றது. உலகத்தில் சாந்தமின்மை தோன்ற ஆரம்பித்துவிட்டது. ஆனால் இப்பொழுது மனிதர்களுக்கு இந்த உண்மை இன்னும் விளங்கவில்லை.

இவர்கள் நம்முடைய சாஸ்திரங்களை நன்றாக ஆராய்ச்சி செய்து, மிகவும் தேர்ச்சியடைந்து இத்தகைய பொருள்களை உண்டாக்கியுள்ளார்கள். நம்முடைய முன்னோர்களான மகா புருஷர்கள் பெரிய ஞானிகளாக இருந்தார்கள்.

ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் இத்த கைய யந்திரங்கள் இல்லை. முன்னேற்றத்திற்கு அனுகூலமான சாதனங்களும் இல்லை. ஆனாலும் இப்பொழுது விஞ்ஞானத்திலும் என்ன என்ன விஷயங்கள் சித்தமாகின்றனவோ அவைகளெல்லாம் மகா புருஷர்களான ஞானிகளுக்கு முன்னமே தெரிந்திருந்தன.

நாம் சாஸ்திரங்களில் ஆகாயத்தில் செல்லும் விமானங்களைப் பற்றிப் படிக்கும் பொழுது அநேக ஜனங்கள் அதை நம்பாமல் பொய்யென்றும் கட்டுக் கதை என்றும் கூறினார்கள். ஆனால் இப்பொழுது உண்மையாகவே ஆகாய விமானங்களைப் பார்க்கும் பொழுது நம்முடைய முன்னோர்கள் எழுதியது உண்மை தான் என்று கூறுகின்றார்கள்.

ஜகதீஸ் சந்திர போஸ் விஞ்ஞான கருவிகள் மூலம் வனஸ்பதி (மரம், செடி, கொடி, புல் ஆகியவை) களில் ஜீவன் உண்டு என்றும், பிராணிகள் தங்கள் சுபாவத்தின்படி சுக துக்கங்களை அனுபவிக்கின்றன என்றும் அவை சிறிதாகவும் பெரிதாகவும் ஆகக் கூடுமென்றும் நிரூபித்த பிறகு வெளி நாட்டு விஞ்ஞானிகள் வனஸ்பதியிடத்தில் ஜீவன் உண்டு என்பதை நம்ப ஆரம்பித்தார்கள். ஆனால் நம்முடைய பழைய ஏட்டுப் பிரதிகளாயுள்ள ஜைன சாஸ்திரங்களில் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னமேயே இந்த விஷயம் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

அநேக வருஷங்களுக்கு முன்பு ஜகதீஸ் சந்திர போஸ் ஜெர்மனி தேசத்தில் வனஸ்பதியில் ஜீவன் உண்டு என்பதை நிரூபித்து காட்டும் பொழுது அந்தக் கூட்டத்தில் அவர் "இந்த விஷயம் எங்கள் நாடா

கிய பாரததேசத்திற்கு ஒரு புதிய செய்தியல்ல, எங்களுடைய முன்னோர்களும் மகா புருஷர்களுமான ஜைன ஆசிரியர்கள் என்ன கூறியுள்ளார்களோ அதையே நான் இப்பொழுது பிரமாண பூர்வமாக விளக்கியுள்ளேன்'' என்று கூறி அதற்குத் திருஷ்டாந்தமாக ஆசாரங்க சூத்திரத்தையும் ஜீவாபிகம சூத்திரத்தையும் மேற்கோளாக எடுத்துக் கூறினார்.

ஜலகாயிக ஜீவன், வனஸ்பதிகாயிக ஜீவன், ஓசையின் சக்தி, ரேடியோ, அணுகுண்டு, புகைப்படம் பிடித்தல், ஆகிய அநேக விஷயங்கள் நம் முன்னோர்களால் சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளன. அவைகளைத் தற்கால விஞ்ஞானிகள் கருவிகள் மூலம் பிரத்தியட்சமாக (கண்கூடாக) விளக்குகின்றார்கள். தற்கால விஞ்ஞானம் பூரணமாயில்லை. இதனால் ஒவ்வொரு நாளும் புதுப்புது ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. விஞ்ஞானிகளும் தங்களுடைய கொள்கைகளை அடிக்கடி மாற்றிக் கொண்டே வருகின்றார்கள். சில வருஷங்களுக்கு முன்பு அமெரிக்கா கண்டத்தின் சமீபத்தில் ஆயிரக் கணக்கான மைல்கள் நீளமும் அகலமும் உள்ள ஒரு நீண்ட விசாலமான தீவு தோற்றத்திற்குத் தென்பட்டது. அதைப்பற்றி இது வரையில் செய்து வந்து ஆராய்ச்சிகளெல்லாம் முற்றுப் பெறாமலும் பூரணமடையாமலும் இருக்கின்றன.

இத்தகைய விஞ்ஞானிகள் கூறும் விஷயத்தை நாம் நம்புவதானால் அது நம்முடைய விவேக மின்மையைக் காட்டுகின்றது. அவர்கள் கற்பனை விஷயங்களை ஆதாரமாகக் கொண்டு ஆராய்ச்சிகளைத் தொடங்குகின்றார்கள்.

கேப்டன் ஸ்கோர்ஸ்பீன் சூக்ஷ்ம யந்திரத்தின் மூலமாக ஒரு துளி தண்ணீரில் அசைந்துச் செல்லக்கூடிய 36450 ஜீவன்கள் இருக்கின்றன. என்று கண்டுபிடித்துள்ளார். நம்முடைய ஞானிகள் ஒரு துளி தண்ணீரில் அசைந்துச் செல்லக்கூடிய ஜிவன்களல்லாமல் கணக்கிட முடியாத அசைவற்ற ஜீவன்களும் உண்டு என்று கூறியுள்ளார்கள். அவைகளெல்லாம் அல்ப ஞானிகளால் எவ்வாறு அறிந்து கொள்ள முடியும்?

தற்கால வைத்திய நிபுணர்கள் (Doctors) ஒரு கடலே அளவுள்ள இடத்தில் க்ஷயரோக சம்மந்தமான கிருமிகள் கணக்கிட முடியாததாய் இருக்கின்றவென்று கூறுகின்ருர்கள். ஆனுல், ஒரு ஊசியின் முனே அளவுள்ள இடத்தில் அனந்த ஜீவன்கள் இருப்பதாகச் சர்வக்கியனுல் கூறப்பெற்றுள்ளது. அவருடைய ஞானம் அற்புதமாயிருக்கின்றது. அவருக்கு எந்தவிதமான கருவியும் சாதனமும் தேவையில்லே. அளவில்லாத ஞானத்தினுலேயே எதையும் கண்டு அறிவிக்கின்ருர்.

விஞ்ஞானிகள் முதன்முதலில் ஓர் ஊசி முனே அளவுள்ள இடத்தில் நூற்றுக்கணக்கான பரமாணுக்கள் இருக்க முடியும் என்று கூறினுர்கள். ஆனுல், இப்பொழுது சூக்ஷ்ம திருஷ்டி யந்திரத்தின் உதவியால் அதே இடத்தில் லக்ஷக்கணக்கான பரமாணுக்கள் இருக்க முடியும் என்று கண்டுள்ளார்கள். ஆனுல், நம்முடைய முன்னேர்களான ஞானிகள் ஓர் ஊசி முனே இடத்தில் அனந்தா அனந்த பரமாணுக்கள், ஜீவன் ஆகியவை இருக்க முடியும் என்று கூறியுள்ளார்கள்.

விஞ்ஞானிகள் தங்களுக்குக் கிடைக்கும் சாதனங்களேக்கொண்டு ஆராய்ச்சி செய்கின்ருர்கள். புதுப்புது சாதனங்கள் கிடைத்தால் புதுப்புது உண்மைகளே

உணர்கின்றார்கள். பழைய கொள்கைகளை விட்டு விடுகின்றனர். அவர்களுக்கு ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றிப் புதிய விளக்கம் கிடைத்தால் அதற்குத்தக்கபடி தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்கிறார்கள். அவர்கள் அவ்வாறு செய்வது மிகவும் ஒழுங்கானதே. ஏனென்றால் அபூர்ண ஞானமுள்ள மனிதர்கள் பூரண உண்மையை எவ்வாறு கூறமுடியும்? குறையுள்ளதை நிறையுள்ளதாக எண்ணுவதினால் என்னென்ன தவறுகள் ஏற்படுகின்றன? அதை அறிவாளிகள் சுலபமாகத் தெரிந்து கொள்ள முடியம்.

இந்தக் காரணத்தினால் முழு வஸ்துவின் உண்மையை அறிவதனாலும் உண்மையான ஞானத்தைத் தெரிவிக்கின்ற பரமாத்மனை வழிபடுவதாலும் மனிதன் ஏன் தவறு செய்வான்? இது நமக்குத் தெரிவதில்லை. இதற்குக் காரணம் ஒன்றே ஒன்றுதான். அதாவது அவனுக்கு சம்சாரத்தில் சுழற்சி இன்னும் பாக்கி இருக்கின்றது. இதனாலேயே அவன் உண்மையைப் பொய் யென்று நினைக்கின்றான்.

இதுவரையில் உலகத்தைப் பற்றிய ஆராய்ச்சிகள் எத்தனை செய்யப்பட்டனவோ அத்தனை விசித்திரமான தேசப்படங்கள் எழுதப்பட்டுள்ளன. ஆனால், இப்பொழுது உள்ள தேசப்படம்கூடத் தவறானதென்று கூறுகின்றனர். ஏனென்றால் இதுவரையில் உலகத்தைப்பற்றி எத்தனை ஆராய்ச்சிகள் செய்யப்பட்டனவோ அத்தனை வேறு உலகங்களும் இருப்பதாகக் கூறுகின்றனர். ஜைன சாஸ்திரம் உலகம் மிகவும் விசாலமானதென்று கூறுகின்றது. கணக்கிலடங்காத யோசனை பிரமாணமுடையது. இன்றைய விஞ்ஞானம் மிகவும் குறுகியது. ஆகையால் அதனு

டைய விஷயம் கிணற்றுக்குள் உள்ள தவளையின் ஞானத்தைப் போன்றதாகும். கிணற்றிலுள்ள தவளை உலகத்தைத் தான் இருக்கும் கிணற்றுக்குச் சமானமாக நினைக்கின்றது. ஆனால் அதனுடைய கொள்கையை மதிப்பவர்கள் எவரும் இல்லை. அம்மாதிரியாகவே குறுகிய அறிவுள்ளவர்கள் செய்யும் ஆராய்ச்சியின் முடிவுகூட அத்தகையதாகும்.

இதுவரையில் பூமியைப்பற்றிச் செய்திருக்கும் ஆராய்ச்சிக்கூடச் சமுத்திரத்திலுள்ள ஒரு நீர்த்துளிக்கு சமானமாகும். இதுவரையில் பாரதவர்ஷத்தின் ஆறு கண்டங்களையும்கூடக் கண்டுபிடிக்கவில்லை. இதைவிட எத்தனையோ மடங்குப் பெரிய த்வீபங்களும் ஆயிரக் கணக்கான தேசங்களும் பெரிய பெரிய கண்டங்களும் இந்தப் பூமியின்மேல் இருக்கின்றன. ஆனால், இவ்வளவு விசாலமான ஞானம் பூரணமடையாத மனிதர்களிடத்தில் எப்படித் தோன்றும்?

நம்முடைய மகா புருஷர்கள் பூரணமடைந்தவர்களாயும் பூரண ஞானிகளாயும் இருந்தார்கள். ஆகையால் அவர்களுக்குக் கற்பனை பண்ணுவதற்கும் சோதனை, ஆராய்ச்சிகள் செய்வதற்கும் அவசியமே இல்லை. அந்த மகா ஞானிகள் தங்களுடைய முழு ஞானத்தினால் சராசர உலகத்தின் எல்லா மாறுதல்களையும் சம்பவங்களையும் பற்றிச் சொல்லிப்போய் உள்ளார்கள்.

இதனால் அபூர்ணமாயும் மாறிக் கொண்டுமிருக்கின்ற ஞானத்தையுடைய விஞ்ஞானிகளைக் காட்டிலும் அளவில்லாத ஞானத்தையுடைய பரமாத்மாவாகிய ஜினேஸ்வர தேவன்மேல் நமக்கு அதிக சிரத்தையும் விசுவாசமும் இருத்தல் வேண்டும்.

பூமி உருண்டையாயிருக்கிறதென்று நிச்சயமாக விசாரணை செய்கின்றவர்கள் எவ்வாறு கூற முடியும்? எவனிடத்தில் முழு ஞானம் இல்லையோ அவன் இத் தகைய விஷயங்களைப் பேசுவதால் அவன் தெரியாதவர் களுள் ஒருவனாக எண்ணப்படுகின்றான்.

ஸ்திரமில்லாத அபூர்ண அறிவையுடைய மனிதர் களிடத்து எவ்வாறு விசுவாசம் வைப்பது? இப்பிரகார மான மனிதர்களுடைய கொள்கை எப்பொழுது மாறும் என்று நமக்குத் தெரியாது. இந்த விஷயத் தைப்பற்றி நாம் ஒன்றும் சொல்ல முடியாது. இம்மா திரியே சூரிய சந்திரர்கள் நிலையாய் இருக்கின்றார்கள் என்பதும், பூமி சுற்றி வருகின்றது என்பதும் பிரமாண மற்றவை. வடக்குத் திசையிலுள்ள துருவ நக்ஷத் திரம் அங்கேயே ஸ்திரமாக ஏன் இருக்க வேண்டும்? பூமி சுற்றினால் துருவ நக்ஷத்திரம்கூட சுற்றுவதாக நமக்குத் தெரிய வேண்டும். ஆனால், துருவம் வடக்கில் ஸ்திரமாக இருப்பதாகவே காணப்படுகின்றது. இதனா லேயே வேறு கொள்கைகள் கற்பனைகளாகும்.

ஒருவேளை துருவ நக்ஷத்திரம் தலையின் உச் சியில் ஸ்திரமாய் இருப்பதனால் அது எவ்வாறு சுற்றி னாலும் அவ்விடத்திலேயே இருப்பதாகக் காணப்படு கிறதென்று சிலர் சொல்லக்கூடும். இதுவும் சரியான தன்று. ஏனென்றால் துருவத்திற்குச் சமீபத்தில் ஏழு நக்ஷத்திரங்கள் (சப்தரிஷி) சுற்றி வருவதாக நமக்குத் தெரிகின்றன. அவைகள்கூட துருவத்திற்குச் சமீபத் தில் ஸ்திரமாயுள்ளன. அந்த ஏழு நக்ஷத்திரங்களின் சங்கிலிகள் சுற்றுகின்றன. அதனால் அவைகள் சுற்று வதுபோல காணப்படுகின்றன. துருவம் சுற்றாததனால் அது அசைவற்றதாகக் காணப்படுகின்றது. ஒரு

வேளை பூமி சுற்றினால் மற்ற நக்ஷத்திரங்களைப்போல துருவ நக்ஷத்திரமும் சுற்றுவதாகக் காணப்பட வேண்டும். ஆனால் அப்படி ஒன்றும் இல்லை. ஆகையால் இந்த யுக்திகளினால் பூமி ஸ்திரமாக இருப்பதாயும் அது சுற்றுவதில்லையென்றும் நாம் தெரிந்துகொள்கிறோம். பூமி ஸ்திரமாயிருக்கின்றது என்னும் சிந்தாப்தம் அனாதி காலத்திலிருந்து வருகின்றது. சூரியன், சந்திரன், க்ரஹம், நக்ஷத்திரம் தாரகைகள் ஆகியவை சுற்றிக் கொண்டேயிருக்கின்றன. நாம் அனுபவத்திலும்கூட அதை அறிகின்றோம்.

பூமி சுற்றி வருகிறது என்னும் கொள்கையையுடையவர்களுள்ளும் இப்பொழுது அபிப்பிராய பேதம் உண்டாயிருக்கின்றது. அவர்களுள் சிலர் பூமி சுற்றவில்லையென்று நம்புகின்றார்கள். ஆகையால் கற்பனை செய்கின்றவர்களிடத்தில் பூரண நம்பிக்கை வைத்தல் கூடாது. பூரண விசுவாசத்தைக் கேவல சித்தாந்தத்தின் மேல் வைத்தல் வேண்டும்.

சித்தாந்தம் பரிபூரண ஞானியான சர்வக்கிய பரமாத்மாவினால் விளக்கப்பட்டது. ஆகையால் அது சாசுவதமும் சலனமில்லாததுமாகும்.

இந்தச் சித்தாந்தம் மூன்று காலங்களையுமுடையது. இது எந்தக் காலத்திலும் மாறுதல் அடைவதில்லை. மாறுதல் அடையக்கூடிய தன்மை பொய்யினிடத்தில் உண்டு. சத்தியத்தினிடத்தில் இல்லை. சத்தியம் மாறுதலையடைந்தால் அது பொய்யாகக் கருதப்படும். இரண்டும் இரண்டும் சேர்ந்து நான்கு ஆகின்றன; ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்னும் இரண்டும் இரண்டும் சேர்ந்து நான்காகவே இருந்தது. இனிமேல் வருங்காலத்திலும்கூட இரண்டும் இரண்டும் சேர்ந்து

நான்காகவே இருக்கும். இம்மாதிரியே மூன்று காலங்களிலும் இரண்டும் இரண்டும் சேர்ந்து நான்கே ஆகும். ஏனென்றால் அது சத்தியம். இரண்டும் இரண்டும் சேர்ந்து மூன்று என்றோ அல்லது இரண்டும் இரண்டும் சேர்ந்து ஐந்து என்றோ கூறினால் அவை பொய்யாகும். இவ்வாறு எல்லாம் உணர்ந்த இறைவனால் கூறப்பட்ட சித்தாந்தம் மூன்று காலத்திலும் மாறுதலடையாமல் சத்தியமாகவுள்ளது.

# ஜைன தர்மம் அனாதி காலத்தது

ஜைனதர்மம் பௌத்த தர்மத்தின் ஒரு பிரிவு அல்ல என்னும் கொள்கை உலகம் பூராவும் தெரிந்த விஷயம். ததாகத புத்தருடைய சிறிய தந்தையான பப்பன் என்பவர் பகவான் பார்சுவ நாதருடைய சிஷ்ய பரம்பரையில் வந்த ஒருவராவர். கௌதம புத்தர் சிறு வயதிலேயே தன்னுடைய சிறிய தந்தையுடன் அநேக தடவைகளில் பகவான் பார்சுவ நாதருடைய சிஷ்யர்களிடத்து போவது வழக்கம். இந்தக் காரணத்தினால் பௌத்த சமய சித்தாந்தத்தில் ஜைன சமயத்தின் இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரரான பார்சுவ நாதருடைய தர்மத்தின் அடையாளம் நன்கு பதிந்து கிடக்கின்றது.

பகவான் மகாவீரர் ஜைனசமயத்தை ஆரம்பித்தார் என்று சிலர் கூறுகின்றனர். இதுவும் பொய்யாகும். ஆனால் பகவான் மகாவீரர் இந்தத் தருமத்தை ஆரம்பிக்க வில்லையென்றும், அவருக்கு முன்பு இருபத்துமூன்று தீர்த்தங்கரர்கள் இருந்தார்கள் என்றும், அந்தச் சமயத்தில் ஜைன தருமம் இருந்ததென்றும், இந்த இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களுக்கு முன்னமே

கூட ஜைன தருமம் இருந்தது என்றும் சரித்திரத்தினு லும் ஜைன சமய நூல்களாலும் அறிகின்றோம்.

ஜைன சித்தாந்தத்தின்படி எந்த எந்த தீர்த்தங்கரர் வந்தாலும் அவர் புதிதாக எதையும் ஆரம்பிப்பதில்லை. ஆனால் அவர்கள் முழு ஞானத்தையுடையவர்களாகை யால் தர்மத்தை நன்கு விளக்குகின்றார்கள். அதனைப் பரப்புகின்றார்கள். தர்மத்தை ஸ்தாபிக்கின்றார்கள். ஆனால் அவர்கள் உண்டுபண்ணினார்கள் என்பது தவறான அபிப்பிராயமாகும், வேதம், புராணம், ஸ்மிருதி, திருக்குறள் ஆகிய அநேக தர்ம சாஸ்திரங் களில் கூட ஸ்ரீரிஷப தேவபகவான் முதற்கொண்டு இருபத்து நான்கு தீர்த்தங்கரருக்கும் ஸ்துதி இருக் கின்றது. இதனால் ஜைன சமயம் வேதத்திற்கு முற்பட்டதென்று நமக்குத் தெரிகின்றது.

இம்மாதிரி ஜைன தர்மம் ஹிந்து தர்மத்தின் பிரிவும் அன்று. இந்த விஷயம் தற்காலத்திலுள்ள கீழ்நாடு மேல் நாடுகளிலுள்ள அநேக வித்வான்களின் அபிப்பிராயத்தால் நன்கு விளங்கும். அவர்களின் அபிப்பிராயங்களுள் சிலவற்றை இந்தப் புஸ்தகத்தன் இறுதியில் சேர்த்துள்ளோம். அவற்றைப் படிப்பதினால் ஜைன சமயத்தின் அனாதிக் காலத் தன்மை விளங்கும்.

# உலகப் பெருமக்களின் அபிப்பிராயம்

---

மேல் நாட்டு வித்வான்களும் பெரிய பெரிய மத ஆசாரியர்களும் ஜைன தர்மத்தைப் பற்றித் தங்களுடைய அபிப்பியாயத்தைக் கீழ்கண்டவாறு கூறியுள்ளார்கள்.

"ஜைனர்களின் விசாலமான சமஸ்க்ருத சாகித்யத்தை விலக்கினல் சமஸ்க்ருத பாஷையின் நிலைமை என்னவாகும்? இது சம்பந்தமாக என்னுடைய ஞானம் எவ்வளவுக் கெவ்வளவு விருத்தியடைகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு என்னுடைய ஆனந்தத்தோடு கூடிய ஆச்சரியமும் விருத்தியடைகின்றது."

—ஜெர்மன் டாக்டர் ஹெர்டல்.

"ஜைனதரிசனம் ஒரு சுதந்திர தரிசனம். ஜைன மதம் மூலதருமம் என்று நான் நிச்சயமாகச் சொல்லுவேன். அது எல்லா தருமங்களினின்றும் முற்றிலும் வேருனது, சுதந்திரமானது, புராதன பாரத தேசத்தின் தத்துவ ஞானத்தையும் தார்மிக ஜீவனத்தையும் அப்பியாசம் செய்வதற்காக அது மிகவும் மகத்துவ பூரணமானது."

—ஜெர்மன் டாக்டர் ஹெர்மன் ஜெகோபி.

"ஜைன தருமம் உண்மையில் இந்து தருமம் அன்று. வைதீக தருமமும் அன்று. அது பாரத தேச மக்களின் வாழ்க்கையின் மேம்பாட்டிற்காகவும் தத்துவ ஞானத்திற்காகவும் முக்கிய சாதனமாகின்றது."

—ஜவஹர்லால் நேரு, பாரத பிரமுகர்.

"ஜைன தரிசனம் மிகவும் உயர்ந்த நிலையிலுள்ளது இதனுடைய முக்கியமான தத்துவங்கள் விஞ்ஞான சாஸ்திரத்தின் ஆதாரப்படி இயற்றப்பட்டுள்ளன. எவ்வளவுக் கெவ்வளவு பதார்த்த விஞ்ஞான முன்னேற்ற மடைகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு ஜைன தர்ம சித்தாந்தக் கொள்கைகள் வலிமையடைகின்றன."

**—டாக்டர் எல். பி. டேசிடோரி, இடாலி.**

"ஜைன தருமத்தின் உற்பத்தியும், அதனுடைய சரித்திரமும், ஸ்மிருதி சாஸ்திரம், அதனுடைய விருத்தியுரை ஆகியவற்றைக் காட்டிலும் மிகவும் பழமையானவை. ஜைன தருமம் ஹிந்து தர்மத்தினின்றும் முற்றும் வேறானது. சுதந்திரமானது."

**— ஸ்ரீ குமாரஸ்வாமி சாஸ்திரி.**

காலஞ் சென்ற நீதிபதி, சென்னை நீதிமன்றம்.

உலகத்தில் பிரசித்தி பெற்ற வித்வானான ஜார்ஜ் பெர்னார்டுஷா என்பவர் ஒரு சமயம், "ஜைன மதத்தின் சித்தாந்தம் எனக்கு மிகவும் பிடித்தமாயிருக்கின்றது. என் மரணத்திற்குப் பிறகு நான் ஒரு ஜைன குடும்பத்தில் பிறக்க வேண்டும் என்பது எனது இச்சை" என்று தேவதாஸ் காந்தியிடம் கூறியுள்ளார்.

ஜைன சமய சித்தாந்தத்தின் பிரபாவத்தினால் அவர் சுத்த ஆகாரத்தையே (புலால், லாகிரி வஸ்துக்கள் சேராத ஆகாரம்) சாப்பிட்டு வந்தார்.

**—ஜார்ஜ் பெர்னார்டு ஷா.**

"உயர்ந்த ஆசாரவிசாரங்களும் உன்னதமான தவக்கிரியைகளும் ஜைன தர்மத்தில் இருக்கின்றன. ஜைன சமயத்தின் ஆரம்பத்தை அறிவது முடியாத காரியம்."

**—மேஜர் ஜெனரல் பர்லாங்.**

"ஜைன தர்மம் உலகத்திற்கு அஹிம்ஸா தர்மத்தை அளித்துள்ளது. வேறு எந்தத் தர்மமும் அஹிம்சையின் எல்லையை இவ்வளவு தூரம் வகுக்கவில்லை. ஜைன தர்மம் அதனுடைய அஹிம்சா சித்தாந்தத்தின் காரண மாக விஸ்வ தர்மம் ஆவதற்குப் பூரண யோக்யதையை யுடையது."

**—டாக்டர் ராஜேந்திர பிரசாத். ராஷ்டிரபதி.**

"ரிக் வேதத்தில் பகவான் ரிஷபதேவரைக் குறித்து ஒரு மந்திரம் காணப்படுகின்றது." ரிஷபம் மாஸமானு ணும் சபத்னுணும் விஷாசகிஹந்தானம் சத்ரூணும் ததி விராஜகோபிதம் கவாம். 101-21-26

"ஜைன சித்தாந்தம் பழமையான காலத்திலிருந்தே இருக்கிறது. ஏனென்ருல், "அருகன் இதம் தயஸே விஸ்வமயம்." முதலாகிய வேத வசனங்களால்கூட இதனுடைய புராதனத்தன்மை தெரியவருகின்றது."

**—புரொபஸர் விருபாக்ஷ. எம். ஏ. வேததீர்த்த.**

"கன்னட பாஷையின் முதல் கவி ஒரு ஜைனர். பழமையானதும்மேன்மையானதுமான இலக்கியங்களை இயற்றின பெருமை ஜைனர்களுடையது."

**—ராவ்பகதூர் நரசிம்மாசார்ய.**

"உண்மையில் பிராம்மண தர்மம் ஹிந்து தர்ம ரூபமாக மாறுவதற்கு வெகு காலம் முன்னுடியே ஜைன தர்மம் இதே தேசத்தில் இருந்ததென்று தற் கால சரித்திர ஆராய்ச்சியினுல் நன்கு விளங்குகின்றது."

**— நீதிபதி ரிங்கலேகர், பம்பாய் உயர்தர நீதிமன்றம்.**

"மொஹெஞ்சதாரோ, பழைய சிலாசாசனங்கள், குகைகள், எஞ்சியிருக்கும் அநேக பழைய சரித்திர சம்பந்தமான கட்டடங்களின் பாகங்கள், ஆகியவற்றி னின்றும் ஜைன சமயம் பழமையானது என்கின்ற உண்மை தெரிய வருகின்றது.

ஜைன சமயம் எப்பொழுது உபதேசிக்கப் பட்டதோ அப்பொழுதுதான் சிருஷ்டியின் ஆரம்பமா யிற்று. வேதாந்த தரிசனத்தைக் காட்டிலும் ஜைன தர்மம் மிகவும் பழமையானதென்று நான் நம்புகிறேன்."

**—ஸ்வாமி ராமமிஸ்ரஜி சாஸ்திரி, பெனரஸ்.**

"வேதங்கள் எழுதப்படுவதற்கு முன்னலேயே ஜைன தர்மம் அவசியம் இருந்ததென்று நான் சொல்லுவதில் கொஞ்சங்கூட அதிசயம் இல்லை."

**— டாக்டர் ஸர். எஸ். ராதாகிருஷ்ணன், உப ராஷ்டிரபதி.**

"மேல் நாடுகளில் ஜனங்களுக்கு ஹிம்சை செய் வது ஒரு சாதாரணமான விஷயமாகிவிட்டது. மனிதர் களை மனிதர்கள் வதைத்துக் கொல்லும் பொழுதும் அவர்கள் சிறிதும் கவனிப்பதில்லை. ஆனல் ஜைன தர்மம் எல்லா ஜீவன்களையும் காப்பாற்ற வேண்டும் என்றும் அதை நடைமுறையில் அனுஷ்டிக்க வேண் டும் என்றும் போதிப்பதனல் அது ஒப்பற்ற ஓர் தர்ம மாயிருக்கின்றது. ஜைனர்கள் உண்பதிலும் குடிப்ப திலும், நடந்து செல்வதினலும் எந்த ஜீவனுக்கும் துன்பம் உண்டாகாதபடி கவனிக்கின்றனர்கள். இத் தகைய ஜீவதயையை நாம் வேறு எந்த மதத்திலும் பார்க்கவேயில்லை."

**— அமெரிக்க மாது.**

டில்லியில் 4—5—53-ல் செய்த சொற்பொழி விலிருந்து எடுக்கப்பட்டது.

"ஜைன சாது யாவரும் போற்றக்கூடிய வாழ்க்கையை நடத்துகின்ருர். ஜைன சாது, விரதங்கள் ஆகியவற்றை முற்றிலும் அனுஷ்டித்து உலகத்தில் ஆத்ம சொரூபத்தையடையும் வழியை நன்ருகக் காட்டுகின்ருர். ஜைன சமயத்தை அனுஷ்டிக்கின்ற ஒரு கிரஹஸ்தனுடைய வாழ்க்கை தோஷமில்லாதது. ஆகையால் பாரதநாடு அவனை அதிக அபிமானத்தோடு பாராட்ட வேண்டும்"

**—டாக்டர் சதிஸ்சந்திர வித்யாபூஷண், எம். ஏ. பி. எச்டி.**
**கல்கத்தா.**

"சாஸ்திரங்களிலிருந்தும், வியாக்கியானங்களிலிருந்தும், ஜைன தர்மம் அனாதி காலத்தது என்று தெரிய வருகின்றது. இந்த விஷயம் விவாதமற்றதாய் மத பேதமில்லாததாய் இருக்கின்றது. இந்த விஷயத்தில் சரித்திரத்தினுடைய பிரமாணம் கிடைக்கின்றது."

**—லோகமான்ய பால கங்காதர திலகர்.**

"உலகத்திற்கு எல்லாவற்றைக் காட்டிலும் ஜைன சரித்திரம் மிகவும் உபயோகமானது. அது சரித்திரம் எழுதுகின்றவர்களுக்கும், பழைய சிலா சாஸனங்கள், கல் வெட்டுக்கள் ஆகியவைகளின் உண்மைகளை அறிய விரும்புகின்றவர்களுக்கும் பேருதவியாயிருக்கின்றது."

**—டாக்டர் சதிஸ் சந்திர வித்யா பூஷண்,** எம். ஏ. பி. எச் டி,
கல்கத்தா.

"ஜைனர்கள் லோகத்திலுள்ள ஜனங்களுக்கு உபகாரம் செய்வதற்காகவே விஸ்தாரமான பெரிய இலக்கியங்களை இயற்றியுள்ளார்கள்."

—புரொபஸர் ஜொஹான்னஸ் ஹெர்டல்.

"விஸ்வ சாந்தி ஸ்தாபனத்தின் பிரதிநிதிகளை முழு உத்ஸாகத்துடன் வரவேற்கும் அதிகாரம் ஜைனர்களுடையது. ஏனென்றால் அஹிம்சை மாத்திரமே விஸ்வ சாந்தியின் சாம்ராஜ்ய பதவியை உண்டு பண்ணக்கூடியது. இவ்வுலகத்திற்கு ஒப்பு உயர்வற்ற அஹிம்ஸா கொள்கையை ஜைன தர்மத்தின் போதகர்களாகிய தீர்த்தங்கர பரமாத்மாக்கள் தந்து அருளினார்கள். ஆகையால் விஸ்வ சாந்தியைப் பரப்புவது பகவான் பார்சுவநாதர், மகா வீரர் ஆகியவர்களுடைய பரம்பரையில் வந்தவர்களல்லாமல் வேறு யார் செய்யக்கூடும்?"

—டாக்டர் ராதா விநோதபால்.

"தற்காலத்தில் பகவான் மகா வீரஸ்வாமியினுடைய பெயர் பிரசித்தி பெற்றிருப்பதற்குக் காரணம் அவர் போதித்த அஹிம்ஸையே என்று நான் விசுவாசத்துடன் கூறுவேன். யாராவது அஹிம்சா தத்துவத்தை மிகவும் அதிகமாகப் பிரகாசிக்கச் செய்திருந்தால் அவர் மகா வீரஸ்வாமியே ஆவார்."

—மகாத்மா காந்தி.

"இந்தியாவில் பாரத நாட்டில், (மகாவீரர் தர்மம் நிச்சயமானதென்றும் சாமாஜிகவாதம் அல்லவென்றும் போதித்தார். தர்மம் உண்மையில் சத்தியமே ஆகும். வெளிச் சடங்குகளை அனுஷ்டிப்பதால் முக்தியை

அடைய முடியாது. மனிதர்களுக்குள் எந்தவிதமான வித்தியாசத்தையும் தர்மம் பாராட்டக் கூடாது.''

**—காலஞ்சென்ற கவி, ரவீந்திரநாத் தாகூர்.**

''ஜைன்'' என்னும் பதம் புலன் அடக்கத்தையும் அஹிம்சையையும் உட்கொண்டுள்ளது. எங்கே அஹிம்ஸை இருக்கின்றதோ அங்கே துவேஷம் இல்லை. அஹிம்ஸா சித்தாந்தத்தை உலகமெங்கும் பரவச் செய்வது ஜைனர்களுடைய கடமையாகும்.''

**—சர்தார் வல்லபாய் படேல்.**

''ஓ அருகனே! நீ வஸ்து ஸ்வரூபமாகிய அம்பையும் உபதேசமாகிற வில்லையும், நான்கு கடையிலா ஆத்ம குணங்களை ஆபரணங்களாகவும் கொண்டுள்ளாய். ஓ அருகனே! நீ விஸ்வ ரூப பிரகாசமாகிய கேவலக் ஞானத்தை அடைந்துள்ளாய். நீ இந்தச் சம்சாரத்திலுள்ள எல்லா ஜீவன்களையும் ரக்ஷிக்கின்றாய். காமாதிகளை வென்றவனே! உனக்கு நிகரான எந்தப் பலவானும் இல்லை.''

**—யஜுர் வேதம், அத்தியாயம் 19, மந்திரம் 14.**

''நான் ராமனல்ல. எனக்குப் பதார்த்தங்களின் மேல் இச்சையில்லை. நான் ஜினனுக்குச் சமானமாக என்னுடைய ஆத்மாவின் சாந்தியை ஸ்தாபிக்க விரும்புகின்றேன்.''

**—யோகவாசிஷ்டம். அத். 15. ஸ்லோகம் 8.**
**(ஸ்ரீ ராமர் கூறியது)**

''அசோக சக்ரவர்த்தி காஷ்மீரம் வரையில் ஜைன தர்மத்தைப் பரவச் செய்தார்.''

**—அபுல் பசல்,**
**(அக்பருடைய ராஜ சபையில் இருந்த ஒரு வித்வான்)**

"ஹிந்து தர்மம் பாரதீய தர்மத்தின் ஒரு அம்ச மாகும். ஜைன தர்மமும் பௌத்த தர்மமும் முற்றி லும் பாரதீய தர்மங்களாகும். ஆனால் அவை ஹிந்து தர்மமல்ல."

—பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு.
(டிஸ்கவரி ஆப் இந்தியா)

"பகவான் மகாவீர ஸ்வாமி ஜைன தர்மத்தை மறுபடியும் பிரகாசிக்கச் செய்தார். அவர் இருபத்து நான்காவது அவதாரம். அவருக்கு முன்னமே ரிஷபர், நேமி, பார்சுவர் முதலான இருபத்து மூன்று அவதாரங் கள் தோன்றின. அவர்களும் ஜைன தர்மத்தை விளக் கினார்கள். இந்தப் பிரகாரமாக இருபத்து மூன்று அவதாரங்களுக்கு முன்னமேயே ஜைன தர்மம் இருந் தது. இதிலிருந்து ஜைன தர்மத்தின் பழைமை தெளி வாகின்றது."

—லோகமான்ய பால கங்காதர திலகர்.

"இந்தியாவில் ஏதாவது ஓர் இடத்தை மையமாக வைத்துக் கொண்டு பத்து மைல் நீளமுடைய ஆரத்தை யுடைய ஒரு வட்டத்தை வரைந்தால் அந்த வட்டத் திற்குள் நிச்சயமாகச் சில ஜைன சின்னங்கள் கிடைக் கும்"

—ஒரு புராதத்துவ ஆராய்ச்சியாளர்.
(கானந்த மாசிக்)

"ஸ்ரீ சங்கராச்சாரியார் சியாத்வாத கொள்கையைச் சரியாக அறிந்துகொள்ளாமல் அதை அநியாயமாகக் கண்டித்துள்ளார். அவருக்குப் பின் வந்த அநேக வித்துவான்களும் அவருடைய அபிப்பிராயத்தை நம்பினார்கள். ஒரு வேளை அந்தப் பெரிய ரிஷி இந்தத் தர்மத்தின் மூலக் கிரந்தங்களை வாசிக்க வேண்டியது அநாவசியமென்று கருதினர் போலும். (அவ்வாறு இல்லாவிடில் அவர் ஜைன சமயத்தைத் தவருக அறிந்திருக்க முடியாது."

—**பேராசிரியர் பணிபூஷண் அதிகாரி.**
(ஹிந்து விஸ்வ வித்தியாலயம், காசி)

★

ராஜன் எலக்டிரிக் பிரஸ், சென்னை-1.

கீழ்க்கண்ட ஜைனப் பிரமுகர்கள் இப்புத்தகத்தை 20,000 பிரதிகள் குஜராத்தி, ஹிந்தி, தமிழ், ஆங்கிலம் ஆகிய பல மொழிகளில் அச்சிட மிக்க மகிழ்ச்சியுடன் பணவுதவி செய்துள்ளார்கள்.

மேற் கொண்டு, கன்னடம், தெலுங்கு, மஹாராஷ்ரம் ஆகிய மொழிகளிலும் இப்புத்தகத்தை வெளியிட முயற்சி செய்கின்றோம்.

## இப்புத்தகத்திற்கு உதவியவர்கள் :

| பிரதிகள் | உதவியவர்களின் பெயர் |
|---|---|
| 5000 | எஸ். ஓ. பவர்லால்ஜீ சேடீயா. |
| 1500 | ஷா. தேவ்ராஜ் மானேக்சந்த். |
| 2000 | ஷா. ஹம்ஸ்ராஜ் அபயசந்த். |
| 2000 | ஷா. தர்ம்சீ ராம்ஜீ டோலியா. |
| 1000 | ஷா. வாடிலால் கபூர்சந்த். |
| 1000 | ஷா. ரூப்சந்த் சபீல்தாஸ். |
| 1000 | ஷா. சீமன்லால் ரிக்வ்சந்த கோடாரீ. |
| 1000 | ஷா. கான்மல்ஜீ கிருபாசந்த்ஜீ சம்தடீயா. |
| 500 | ஷா. பாபாலால் அண்டு கம்பெனி. |
| 500 | ஷா. ஹுக்மீசந்த்ஜீ ரதன் சந்த்ஜிபோத்ரா. |
| 1000 | ஷா. ஹஜாரீமல்ஜீ ரூப்சந்த்ஜீ சாவன் சுகா. |
| 3500 | மதராஸ் ஜைனசங்கே க்யான்கா தா மேஸே. |

ராஜன் எலக்டிரிக் பிரஸ், சென்னை-1.